உ


சிவமயம்

சைவநீதி

SAIVANEETHY

# சைவநீதி

# SAIVANEETHI



மலர் 20 | துர்முகி ஐப்பசி - மார்கழி | 2016-Oct. - Dec. | இதழ் 7-8-9



ரூபா.50/-


திருவாவடுதுறை ஆதீன சைவ சித்தாந்தப் பயிற்சி மையம், கொழும்பு.

மெய்கண்ட நாயனார் குருபூசை, 2016.10.30.









# பொருளடக்கம்


| | |
|---|---|
| ஆடும் பெருமானின் கேள்வியும் அப்பரடிகளின் பதிலும் | 02 |
| திருநீலகண்ட நாயனார் | 04 |
| திருமந்திர விளக்கம் | 07 |
| வாரியார் பொன்மொழிகள் | 08 |
| அஞ்சலி | 09 |
| கும்பாவிஷேக தத்துவம் | 10 |
| புராணபடனமும் மலேசியா அருள்நெறித் திருக்கூட்டமும் | 12 |
| திருக்குறட்கதை | 14 |
| யாப்பிலக்கணம் | 19 |
| சைவ சமய வினாவிடை | 23 |
| அகத்தியர் தேவாரத்திரட்டு உரை விளக்கம் | 27 |
| சைவசமய விழுமியங்கள் | 32 |
| காலத்தால் மிகமுந்திய சித்தாந்த சாத்திரம் | 35 |
| நினைவிற் கொள்வதற்குரிய வளிபாட்டு நாட்கள் | 39 |

உ

சிவமயம்

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

# சைவநீதி

மலர் 20 துர்முகி ஐப்பசி, கார்த்திகை, மார்கழி சைவசமய வளர்ச்சி கருதி வெளிவரும் இதழ் 7, 8, 9

**தொடக்குனர்:**
கலாபூஷணம்,
ஞானசிரோமணி,
சைவப்புலவர்மணி,
வித்துவான்
**திரு. வ. செல்லையா**

**ஆலோசகர்**
கலாபூஷணம்,
சைவப்புலவர்
**திரு. சு. செல்லத்துரை**

**ஆசிரியர்**
சைவப்புலவர்,
சித்தாந்தச்செம்மணி.
**திரு. செ. நவநீதகுமார்** M.A.

**விநியோகம்**
சித்தாந்தரத்தினம்
**திருமதி. பத்மினி ராஜேந்திரா**

**வெளியிடுவோர்**
திருவாவடுதுறை ஆதீனம்
சைவசித்தாந்தப்
பயிற்சி மையத்தினர்
கொழும்பு.

No. 4A, 1st Lane,
Ratmalana.
Tel: 0779 008 286

## உள்ளத்தனைய உயர்வு

ஒருவன் உயர்ந்தவனாக பலராலும் போற்றப்படுபவனாக இருக்கவேண்டும் என்றால் அவன் உள்ளம் உயரவேண்டும். குளத்திலே நீர் மட்டம் எவ்வளவிற்கு உயர்ந்திருக்கிறதோ அவ்வளவிற்கு அங்குள்ள தாமரை உயரும். உள்ளம் உயர்ந்தால் மனிதனும் உயர்வான்.

"வெள்ளத்தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத்தனைய உயர்வு." என்பார் வள்ளுவர்.

உள்ளம் உயர நல்லாரிணக்கம் உதவும். "நல்லாரிணக்கமும் நின் பூசை நேசமும் ஞானமும் அல்லது வேறுநிலை உளதோ" என்று பட்டினத்தடிகள் பாடுகின்றார். நல்லாரைக் காண்பதுவும், நல்லார் சொற் கேட்பதுவும், அவர் குணங்கள் உரைப்பதுவும், அவரோடு நட்புக்கொண்டு இருப்பதுவும் நன்று. நல்லார் தொடர்பால் நாமும் நல்லவராகி எமது உள்ளமும் உயர்வடையும். உள்ளத்தால் உயர்ந்து பிறர் போற்ற வாழ்வதே வையத்து வாழும் நெறி. வையத்து வாழ்வாங்கு வாழ்ந்தால் வானுறையும் தெய்வ நிலைக்கு வரமுடியும்.

உள்ளத்தால் உயர்வடைய மனத்திலே தூய்மை வேண்டும். பிறருக்குத் தீங்குவரும் விதமான எண்ணங்கள் இருக்கக்கூடாது. எல்லா உயிர்களும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என எப்போதும் நினைக்க வேண்டும். பேச்சிலே கனிவும் நடையிலே பணிவும் இருக்கவேண்டும். பிறர் மனம் வருந்தும்படி பேச்சோ செயலோ இருத்தல் ஆகாது. உடலாலும் உள்ளத்தாலும் எல்லோருக்கும் உதவும் நிலையே சிறப்பானது.

நல்லாருடன் சேர்ந்து இறைபூசை செய்து வழிபட்டு அதன் வழி ஞானம் பெற்று உயர்வடையப் பிரார்த்திப்போமாக.

# ஆடும் பெருமானின் கேள்வியும் அப்பரடிகளின் பதிலும்

இறைவழி நின்ற அருளாளர் பலரும் உலக வாழ்வை விரும்பிக் கேட்டதில்லை. இறை நிலையையும் இறை வாழ்வையுமே விரும்பினர். மண்ணுலகை விட வானுலகுக்கு முக்கியம் கொடுத்தனர். திருவள்ளுவர் கூட 'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்' எனக் கூறி வானுலகிற்கு மேலான இடத்தைக் கொடுக்கிறார்.

சிவ தொண்டில் சிந்தை மகிழ்ந்த அப்பரடிகள், இந்த உலகில் மனிதப் பிறவியை வேண்டுகிறார். ஆடும் பெருமானின் அழகிய திருவடிவத்தையும் தூக்கிய திருவடியையும் காண்பதற்காக இம் மனிதப்பிறவியை வேண்டிப் பெறலாம் என்பது அவரின் கருத்து.

**'குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண்சிரிப்பும்**
**பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால்வெண்ணீறும்**
**இனித்த முடைய எடுத்தபொற் பாதமும் காணப்பெற்றால்**
**மனித்தப் பிறவியும் வேண்டுவதே யிந்த மானிலத்தே'.**

அவனின் ஆடலைக் கண்டு களிக்க எத்தனை பேர், எத்தனை காலமாக வருகிறார்கள்! ஆதியில் பதஞ்சலி முனிவரும், வியாக்கிரபாதரும் (புலிக்கால் முனிவர்) இன்னும் பலரும் வந்தனர். சைவ நாயன்மார்கள் வந்து பாடித் தொழுதனர். 'அறவா, நீ ஆடும் போது உன் அடிக்கீழ் இருந்து ஆனந்தம் அனுபவிக்க வேண்டும்' என்று காரைக்கால் அம்மையார் வேண்டினார். அன்று முதல் இன்று வரை அருளாளர்களும் ஞானிகளும் ஆடும் கூத்தனின் நடனத்தைப் பார்த்துப் பரவசம் அடைந்தார்கள்.

விஞ்ஞானிகள் கூட அவனின் ஆட்டத்தைக் கண்டு அதிசயம் கொள்கின்றனர். இயற்பியல் விஞ்ஞானியான ஃப்றிஜிற் கப்ரா (Frijit Capra) தனது 'Tao of Physics' என்ற நூலில் பலபட விதந்து எழுதியுள்ளார். சைவத்தின் அறிவியல் தத்துவத்துக்கும் அணுவியல் கோட்பாட்டுக்கும் இடையில் ஓர் இணைப்பைக் காண்கிறார்.

இன்று அணுத்துகள் குறித்த உலகின் மிகப் பெரிய ஆய்வுக் கூடமான 'சேர்ண்' (CERN) நிலையத்தை ஆடும் பெருமானின் திருவுருவம் அலங்கரிக்கிறது.

இத்தகைய சிறப்பு வாய்ந்த கூத்தனின் ஆட்டத்திலும் அழகிய தோற்றத்திலும் அப்பரடிகள் தன்னையிழந்து மனிதப் பிறவியை விழைந்தது வியப்பல்ல. அவனின் திருநடனத்தைக் காண்பதற்கு அவர் ஒருமுறை சிதம்பரம் சென்றார். பார்த்ததும் பரவசமடைந்தார். கூத்தப்பிரானின் ஆட்டத்திற்றான் எத்தனை அழகு! அதில் எத்தனை உணர்வலைகள் எழுகின்றன!

குனித்த புருவமும், செவ்வாயின் புன்னகையும், தூக்கிய பொற்பாதமும், திருப்பார்வையும் பிறவும் கண்ணையும் கருத்தையும் கவர்ந்து மெய் மறக்கச்

செய்கின்றன. ஆடலரசனின் அபிநயத்தில் பல செய்திக் குறிப்புக்கள் வெளிப்படுகின்றன. எத்தனையோ கேள்விகள் எழுவதாக அப்பர் உணர்கிறார். 'நீ என்று வந்தாய்?' என்று கேட்பது போலவும் இறைவனின் திருக்குறிப்பு இருக்கிறது. அப்பர் இவற்றைப் பின்வருமாறு பாடுகிறார்.

**'ஒன்றி யிருந்து நினைமின்கள் உந்தமக்கு ஊனமில்லை**
**கன்றிய காலனைக் காலாற் கடிந்தான் அடியவர்க்காய்**
**சென்று தொழுமின்கள் தில்லையுட் சிற்றம் பலத்துநட்டம்**
**என்றுவந் தாய்எனும் எம்பெரு மான்தன் திருக்குறிப்பே'.**

இறைவனின் திருக்குறிப்பைச் சொல்லும் அப்பரடிகள் வேறு சிலவற்றையும் விளக்குகிறார். 'மனம் ஒன்றி நினைந்து அவனை வழிபடுங்கள்; உங்களுக்கு எத்தகைய இன்னலும் வராது. அடியவனான மார்க்கண்டேயனுக்காக வெகுண்டு, வந்த இயமனை அவன் முன்னர் காலால் உதைத்துக் காப்பாற்றினான். தில்லைச் சிற்றம்பலம் என்னும் சிதம்பரத்தில் அவன் நடனம் (நர்த்தனம் - நட்டம்) ஆடுகின்றான்; அங்கே சென்று தொழுங்கள்; அவன் எம்மையும் காப்பான்' என்று விளக்கி அறிவுறுத்துகிறார்.

'என்று வந்தாய்?' என்னும் கேள்விக் குறிப்புடன் வேறு சில குறிப்புக்களும் ஒட்டி நிற்கின்றன. 'ஏன் வந்தாய்?', எதற்கு வந்தாய்?', 'இப்போதுதான் வந்தாயா?' போன்றவை சில. 'நீயுமா வந்தாய்?' போன்ற இகழ்ச்சிக் குறிப்பும் தெரிகிறது. இறைவன் இவற்றை எல்லாம் குறிப்பால் உணர்த்துவதாக எண்ணி நாவரசர் குழம்புகிறார். இன்பமும் துன்பமும் கலந்த உணர்வலைகள் உள்ளத்தில் பொங்கி எழுகின்றன.

மேலான பெருமக்கள் தம்மைக் குறித்து பெரிதாக எண்ணுவதில்லை; தற்பெருமை கொள்வதில்லை. தம்மைச் சிறியவராகக் கருதிப் பணிவார்கள். அது அவர்களின் பண்பு. அப்பரடிகளும் தன்னைச் சிறியவனாகக் கருதி இறைவனைப் பணிந்து பரவுவார்.

தான் பக்தனாய் நின்று பரமனைப் பாடுவதில்லை. எந்த வழியிலும் பக்தி செய்வதில்லை. மேலான இறைவனும் மேலான யோகியுமான ஈசன் தன்னை இகழ்ந்து நோக்குவதை எவ்வாறு பிழை என்பது? தன்னை இகழ வேண்டாம் என வேண்டுகிறார்.

**'பத்தனாய்ப் பாட மாட்டேன் பரமனே பரம யோகி**
**எத்தினாற் பத்தி செய்கேன் என்னைநீ இகழ வேண்டா'**

இங்ஙனம் வேண்டியவர், ஈசனை முத்தன் என்றும் முதல்வன் என்றும் விளிக்கிறார். முத்தி என்றால் விடுதலை. விடுதலை பெறுதலே பிறவி எடுத்ததன் பயன் என்று கருதப்படுகிறது. எதிலிருந்து விடுதலை பெறுதல் என்றால் எம்மைப் பிணித்துள்ள பாசப் பொருட்களிலிருந்து என்பது சைவம் தரும் பதில். (பாசம் - கட்டு). இயல்பாகவே எமக்குப் பல குறைகள் உள்ளன.

தொடர்ச்சி 6ஆம் பக்கம்

பெரிய புராணத் தொடர்..

## திரு நீலகண்ட நாயனார்

திரு நீலகண்ட நாயனார் சிதம்பரத்திலே, குயவர் குலத்திலே அவதரித்தார். பக்தி மிகுதியினால் திருநீலகண்டம், திருநீலகண்டம் என்று கூறி இறைவனைத் தினமும் வழிபட்டதால் மக்கள் இவரை திருநீலகண்டர் என அழைத்தனர். இவர் சிவனடியார்களுக்குத் திருவோடு செய்து அளிக்கும் திருப்பணியில் ஈடுபட்டு வந்தார்.

கற்புடைய மனைவியோடு இல்லறம் நடாத்திவரும் நாளிலே, வாழ்வில் இவருக்கு ஒரு சோதனை ஏற்பட்டது. அதாவது சிவ அன்பு நிரம்பிய இவர் பரத்தையரோடும் தொடர்பு வைத்திருந்தார் என்பதே அக்குற்றம் ஆகும். அதனை அறிந்த அவர்தம் மனைவியார், "நீர் எம்மைத் தீண்டுவீராயின் திருநீலகண்டம்" என்று திருநீலகண்டத்தின் மீது ஆணையிட்டுக் கூறினார். அது கேட்ட நாயனார் திடுக்கிட்டுத் தம் மனைவியாரை அயலாரைப் போலவே நோக்கி, 'எம்மை என்று பன்மையாகக் கூறியதால் உம்மையே அன்றிப் பிறமாதர்களையும் மனத்தினாலும் தீண்டேன்" என்று உறுதியளித்தார்.

இவ்வாறு திருநீலகண்டர் உறுதி கூறிய பான்மையைச் சேக்கிழார்...

"ஆதியார் நீல கண்டத்து
அளவு தாம் கொண்ட ஆர்வம்
பேதியா ஆணை கேட்ட
பெரியவர் பெயர்ந்து நீங்கி
ஏதிலார் போல நோக்கி
எம்மை என்றதனால் மற்றை
மாதரார் தமையும் என்றன்
மனத்தினும் தீண்டேன் என்றார்." என்று பாடியுள்ளார்.

அன்று முதல் பிறர் ஒருவரும் அறியாமல் தனித்த இல்வாழ்க்கை நடத்தினார். இளமை கடந்து முதுமையடைந்தனர்.

திருநீலகண்டரது ஒழுக்கத்தின் மேன்மையை உலகறியச் செய்ய வேண்டும் என்று சிவபெருமான் விரும்பினார். இறைவன் ஒரு சிவயோகியாக வேடம் தாங்கி, ஓடு ஏந்திய கரத்தோடு திருநீலகண்டரிடம் வந்தடைந்தார். வந்த பெரியவரை வரவேற்ற நாயனார், அவருக்குத் தான் செய்ய வேண்டிய தொண்டு யாதென ஆதங்கத்துடன் வினவினார்.

அதற்கு, இறைவன் "அன்பனே என்னிடம் உள்ள ஓட்டை உன்னிடம் தரப்போகிறேன். இது சாமானியமான ஓடு அல்ல . ஆதலால் நீ இதனைப் பத்திரமாக வைத்திருந்து, பின்னர் நான் திரும்பி வரும்போது அதனை மீண்டும் தந்து

உதவுவாயாக” எனக் கூறியருளினார். அடியவரும் மிக்க மகிழ்ச்சியுடன் அத்திருவோட்டைப் பெற்று, உள்ளே சென்று மிகக் கவனமாக வைத்தார். அடியவரின் நல்லொழுக்கத்தை உலகிற்கு காட்ட விரும்பிய நஞ்சுண்ட கண்டன், தான் நாயனாரிடம் அடைக்கலமாகக் கொடுத்த திருவோட்டை மறைத்தருளினார்.

மீண்டும் இறைவன் பெரியவர் வேடத்துடன் நாயனார் வீட்டிற்கு வந்து, தனது திருவோட்டைத் தரும்படி கேட்டார். அதை எடுத்துவர உள்ளே சென்ற நாயனார் திருவோட்டைக் காணாது மிகுந்த கவலையுடன் வெளியில் வந்து நடந்ததைக் கூறினார். அதற்குப் பதிலாக புதிய ஓடு ஒன்று தருவதாகக் கூறியபோது, “என் மண் ஓட்டினைத்தவிர, வேறு பொன் ஓட்டினைக் கொடுத்தாலும் நான் வாங்க மாட்டேன். நீயே அந்த ஓட்டினைத் திருடியிருக்கிறாய். நீ அதனைக் களவு செய்யாவிடில் உனது ஆசை மகனைப் பிடித்துக் கொண்டு குளத்தில் மூழ்கிக் கூறுக” என்றார். அதற்கு திருநீலகண்டர், “ஐயனே எனக்கு மகன் இல்லையே! என் செய்வேன் என்றார். அதனைக் கேட்ட சிவயோகியார், அப்படியாயின் உன் மனைவியின் கையைப் பிடித்துக்கொண்டு குளத்தில் மூழ்கி ஓட்டினைத் திருடவில்லை எனச் சத்தியஞ் செய்” என்றார்.

அதற்கு திருநீலகண்டர் “தெய்வம் போன்றவரே எங்களுக்குள் ஒரு சபதம் உள்ளது, நாம் ஒருவரை ஒருவர் தீண்டுவதில்லை! எனவே நான் மட்டும் குளத்தில் மூழ்கிச் சத்தியம் செய்து தருகிறேன்” என்றார்.

மிகவும் நன்றாக இருக்கிறது உன் விவாதம். திருவோட்டைத் தரவும் மறுக்கிறாய், சத்தியம் செய்யவும் மறுக்கிறாய், ஆதலால் இவ்விடயத்தை தில்லைவாழ் அந்தணர் சபைக்கு எடுத்துச் செல்வதுதான் முறை. நீ உன் மனைவியையும் அழைத்துக் கொண்டு, என் பின்னால் வருவாயாக என்றார் சிவயோகி.

தில்லைவாழ் அந்தணர் சபையில், கங்கையையும், திங்களையும் மறைத்து வைத்த ஈசன் நடந்தவற்றைக் கூறினார். அதற்கு திருநீலகண்டர் “பெரியவர் ஓடு தந்ததும் உண்மை. அடியேன் மிக்க கவனமாக வைத்ததும் உண்மை. மீண்டும் நான் எடுக்கச் சென்றபோது அது அங்கு காணாமற் போனதும் உண்மை. எனது நேர்மையை ஊர்மக்கள் அறிவர். அவர்களைக் கேட்டுப்பாருங்கள்” என்றார்.

“அதற்கு ஒன்றும் அவசியமில்லை, நீர் உமது மனைவியின் கரம் பற்றி குளத்தில் மூழ்கிச் சத்தியம் செய்து கொடும்.” என அந்தணர்கள் கூறினர். திருநீலகண்டர் மனைவியுடன் திருப்புலீச்சரத்தில் அமைந்துள்ள குளத்தையடைந்து, ஒரு மூங்கிற் தண்டையெடுத்து ஒரு முனையைத் தான் பற்றியவண்ணம், மறு முனையை மனைவியைப் பற்றிக்கொள்ளச் சொல்லி இருவருமாகக் குளத்தில் இறங்கினர். இதைக் கண்ணுற்ற இறைவன், “இது என்ன விந்தை! உமது மனைவியின் கரம் பற்றாது மூங்கிற் கோலின் முனையைப் பற்றுவதற்குக் காரணம் யாது? நான் இதற்கு இசையேன்” என்றார்.

நடந்தவற்றைக் கூறவேண்டியுள்ளதால், திருநீலகண்டர் மாது சொன்ன சூளால் தனக்கும், தன் மனைவிக்கும் இடையே நெருக்கமின்றி வாழ்ந்து, முதுமையும் எய்திவிட்ட தன் பரிதாப வரலாற்றை ஊரறியச் சொல்லி முடித்தார். இருவரும் குளத்தில் இறங்கினர். மேல் எழுந்து வரும் போது எம்பெருமான் திருவருளால் முதுமைப் பருவம் நீங்கி, இளமைப் பருவம் உடையவர்களாகப் பிரகாசித்தனர். உடனே தேவர்களும், முனிவர்களும் அந்நாயனார் மீது ஆகாயத்தில் இருந்து பூமாரி பொழிந்தனர். சிவயோகியாராக வந்த சிவபெருமான் மறைந்து உமாதேவியாரோடு இடபாருடராகக் காட்சியளித்து அவ்விருவரையும் நோக்கி, "நீங்கள் இருவரும் பெற்ற இந்த இளமைப்பருவம் என்றும் நீங்காதவாறு எம்மிடத்தில் இருப்பீர்களாக" என்று திருவாய் மலர்ந்து மறைந்தார். அவ்வாறு இருவரும் சிவலோகம் அடைந்து பேரின்பப் பெருவாழ்வை எய்தினர்.

திருநீலகண்டத்துக் குயவனார்க்கு அடியேன்" சுந்தரர் பெருமான்.

சித்தாந்தரத்தினம். பத்மினி ராஜேந்திரா

---

3ஆம் பக்கத் தொடர்ச்சி...

அவற்றால் கட்டுண்டு இருக்கிறோம். இத்தகைய குறைகள் எதுவும் இல்லாதவன் இறைவன். அதனால் அவன் முத்தன் எனப்படுகின்றான். முத்தனான சிவன் அனைத்துக்கும் மூலமாக, முதற் பொருளாக இருக்கிறான். இதனால் அவன் முதல்வன் என்றும் அழைக்கப்படுகிறான்.

முத்தன், முதல்வன் என்ற பெயர்களால் சிவபிரானின் பெருமையைக் கூறி, 'என்று வந்தாய்' என்னும் அவனின் கேள்விக்கு அப்பரடிகள் பதிலளிக்கிறார். 'அத்தா, உன் ஆடல் காண்பான் அடியனேன் வந்தவாறே' என்பது அவரின் பணிவும் பக்தியும் இணைந்த நேர் பதில்.

**'பத்தனாய்ப் பாட மாட்டேன் பரமனே பரம யோகி**
**எத்தினாற் பத்தி செய்கேன் என்னைநீ இகழ வேண்டா**
**முத்தனே முதல்வா தில்லை யம்பலத் தாடுகின்ற**
**அத்தாவுன் ஆடல் காண்பான் அடியனேன் வந்த வாறே'.**

அவன் ஆடுவதால் அகிலம் இயங்குகிறது. உயிர்கள் இயங்குகின்றன. அவனே எமது வாழ்வின் முதலாக இருந்து அருளுகிறான். மனம் ஒன்றி இருந்து அவனை நினைத்துத் தொழுதால் எமக்கு எத்தகைய இன்னலும் வராது. இது அப்பரடிகளின் அனுபவ வாக்கு.

சித்தாந்தரத்தினம், கலாநிதி. க. கணேசலிங்கம்.
'அன்புநெறி' சிறப்பாசிரியர், மன்றக் காப்பாளர்.

நன்றி: அன்புநெறி - கனடா.

# திருமந்திர விளக்கம்

சிவபெருமானுடைய திருவடிகளில் அன்பு வைத்து எந்நேரமும் இடையறாது வழிபட்டால் முத்தி சித்திக்கும் எனத் தோத்திரமும் சாத்திரமுமாக விளங்குகின்ற திருமூலர் திருமந்திரம் உணர்த்துகின்றது.

**திருவடி ஞானம் சிவமாக்கு விக்கும்**
**திருவடி ஞானம் சிவலோகம் சேர்க்கும்**
**திருவடி ஞானம் சிறைமலம் மீட்கும்**
**திருவடி ஞானமே திண்சித்தி முத்தியே.**

திருவடி ஞானம் : கருவிகரணங்களும் உலகும் உண்மை என நம்பும் பாசஞானத்தையும், நான் இவற்றின் வேறாகிய என்றுமுள்ள ஆன்மா எனும் பசு ஞானத்தையும் கடந்து, எல்லாம் சிவன் செயலே என்செயலாவதொன்றும் இல்லை எனும் சிவஞானத்தைப் பெற்றால்.

திருவடி ஞானம் சிறைமலம் மீட்கும் : அச்சிவ ஞானம் ஆன்மாவை அநாதியே பற்றி இருக்கும் மலபந்தங்களில் இருந்து நீக்கும்.

திருவடி ஞானம் சிவலோகம் சேர்க்கும் : பாசஞானம், பசுஞானம் என்பவற்றைக் கடந்த சிவஞானம் சிவலோக முத்தியைத்தரும்.

திருவடி ஞானம் சிவமாக்குவிக்கும் : அச்சிவஞானம் ஆன்மாவுக்குச் சிவமாந் தன்மையைக் கொடுக்கும்.

திருவடி ஞானமே திண்முத்தி சித்தியே : அச்சிவஞானம் நிலையான முத்திஇன்பத்தைச் சித்திக்க வைக்கும்.

சிவபெருமானின் திருவடி ஞானம் எனும் சிவஞானத்தைப் பெற்றால் அது ஆன்மாவைப் பீடித்திருக்கும் மலபந்தத்திலிருந்து மீட்டுச் சிவலோகம் சேர்த்துச் சிவமாந்தன்மை தந்து இடையறாப் பேரின்பமாகிய முத்தியைச் சித்திக்கவைக்கும், எனும் சைவசித்தாந்த முடிவை இந்தத் திருமந்திரம் சொல்கிறது.

சைவப்புலவர் சு. செல்லத்துரை.

## வாரியார் பொன் மொழிகள்

அன்பு :- கடவுளிடம் பக்தி செலுத்த வயதும், உருவமும் குறுக்கிடாது. கல்வி, செல்வம், ஜாதி, பலம் முக்கியமல்ல. நல்ல ஆசாரம், நற்குணம் இவற்றிலும் பகவான் அவ்வளவாகக் கவனம் செலுத்துவதில்லை. அவர் அன்பு ஒன்றையே எதிர்பார்க்கிறார்.

உலகம் :- இவ்வுலகம் ஒரு முட்செடி போன்றது. முட்செடியின் முள்ளில் மாட்டிக் கொண்டுள்ள துணியின் ஒரு பகுதியை விடுவிப்பதற்குள் மற்றொரு பகுதி அதில் மாட்டிக் கொள்கிறது. உலகமெனும் முட்செடியில் அகப்பட்டுக் கொள்கிறவர்களின் கதியும் அப்படியே.

பக்தி :- பக்தி வயப்படும் பரமன் பக்தியினால்தான் மகிழ்ச்சியடைகின்றார். எனவே பக்தி செய்து முத்தியடைவோமாக.

உதவி :- பசுவிற்கு தவிடு, பிண்ணாக்கு போன்ற தீவனங்களை வாய்வழியாக ஊட்டுகிறோம். அது தன்னுடைய வயிற்றில் பாலைச் சுரந்து தருகிறது. அதைப்போலவே ஏழை, எளிய மக்களுக்கு நாம் செய்யும் உதவி அவர்களிடமிருந்து கிடைக்காவிட்டாலும் மாற்று வழியாக அதன் பலன் நமக்கு வந்தே தீரும். எனவே ஏழை எளியவர்களுக்கு உதவி செய்தல் வேண்டும்.

கோணலைநீக்க :- நூல் தட்டிக் கோணலை நீக்கிய மரங்கள் மாளிகைகளிலும், நிழலில், கட்டிடத்தில் திகழ்ந்து எண்ணெய் பூசிப் பளபளப்புடன் இருக்கும். அதேபோல் நீதி நூல்களைத் தட்டி மனத்தின் கோணலை நீக்கிய மனிதர்கள் உயர்ந்த பதவிகளில் அமர்ந்து எல்லோராலும் மதிக்கப்படுவர்.

சேவை :- கண்ணுக்குத் தெரிந்த இந்த உலகத்திற்குச் சேவை செய்வதோடு கண்ணுக்குத் தெரியாத கடவுளுக்கும் சேவைசெய்.

வன்மை :- பெண்களை, ஆண்கள் காவல் புரிவதனால், பெண்மை தாழ்ந்ததன்று. மென்மையை வன்மை காவல்புரியும். வன்மைக்கு மென்மை அடங்கும். ஆடவர் வன்மையுடையவர், மகளிர் மென்மையுடையவர்கள். தங்கம் மென்மையானது, இரும்பு வன்மையானது. வன்மையான இரும்புப் பெட்டியில் மென்மையான தங்கத்தை வைத்துக் காப்பாற்றுவார்கள். காவலில் இருக்கும் தங்கம் தாழ்ந்ததென்று உலகம் கருதுகிறதா? உய்த்து உணர்க.

தாயே கடவுள் :- தவமிருந்து, கருவுற்று, பெற்று, பாலூட்டி, மருந்து கொடுத்து, தான் பத்திய மிருந்து செய்த தாயின் உதவிகள் உனது கண்ணுக்கு தெரியாதவை. ஆதலில் தாய் கடவுள் போன்றவர். அவரைப் பேணிப் பாதுகாத்துவா.

வாழ்க்கைத்துணைவி :- உன் மனைவியைக் காப்பாற்றுவது மிகமிக அவசியம். ஏன்? அவள் உன் வாழ்க்கைத் துணைவி.

தொடர்ச்சி 17 ஆம் பக்கம்

## எங்கள் நினைவிற் சத்தியவதனி
(ஆசிரியப்பா)

குன்றா உழைப்பும் குறையா முயற்சியும்
என்று முமக்கு ஏற்றம் தரவே
தளர்வுறு வயதிலும் தளரா திருந்தே
இளஞ்சைவப் புலவராய்த் திகழ்ந்தீ ரன்றோ
சைவப் புலவராய்ச் சித்தி யடைந்தும்
சைவப் புலவர்ச் சான்றிதழ் காணமுன்
சாவரு மென்று கனவிலு மறியோம்
யாவரு மேங்க வானுல கடைந்தாய்
ஒருதரம் நினைக்கி லோடுதே கண்ணீர்
வருகுதே உந்தன் வடிவமே யெங்கும்
வல்ல நாதன் வைரவப் பெருமான்
குலதெய் வமாகிக் குடிகொண் டுமக்கு
நல்வழி காட்டி நற்கதி அடைய
எல்லிலு மிருட்டிலு மெங்கும் வருவான்
கால னும்மைக் கவர்ந்த போதும்
ஞாலத் தும்மை நாம்மற வோமே
தலைநகர் கொழும்பிற் றிகழு மெங்கள்
தொல்புகழ் மிக்க திருவா வடுதுறைச்
சைவசித் தாந்தப் பயிற்சி மையத்திற்
சைவ நீதியைச் சிந்தையி லெண்ணி
எம்முடன் நீரும் சேர்ந்து படித்ததை
நம்மவர் வாழ்வில் நினைந்திடு வோமே
விளங்கிடும் ஊழியர் விரிவுரை யாளரும்
தளர்விலா மாணவர் தக்கவர் நாமும்
தில்லைக் கூத்தன் திருவடி தொழுது
எல்லையி லின்ப மென்றும் காணப்
பாடிப் பரவிப் பணிந்து நின்றே
கூடிச் செபித்துத் துதித்திடு வோமே

பாவாக்கம் : சித்தாந்தரத்தினம் செல்வி வ. தேவராணி.

# கும்பாபிஷேகத் தத்துவம்

இறைவன் ஒளிமயம் ஆனவர். நமது உடம்பு இரதம், உதிரம், எலும்பு, தோல், இறைச்சி, மூளை, சுக்கிலம் ஆகிய ஏழு தாதுக்களால் ஆனது.

இறைவன் ஒளியே உருவாகத் திகழ்பவர். சோதியே சுடரே சூழொளி விளக்கே, சுரிகுழல் பணைமுலை மடந்தை பாதியே, திருவையாறு அகலாத செம்பொற் சோதி, ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ் ஜோதி, அலகில் ஜோதி, பிரமமாய் நின்ற ஜோதி, தீப மங்கள ஜோதி என்ற ஆன்றோர் வாக்குகளால் அறிக. ஜோதி எங்கும் நிறைந்திருந்தாலும் கல்லிலே அதிகம் உள்ளது. ஒரு கல்லை மற்றொரு கல் தட்டினால் நெருப்பு வருவதைக் காண்கிறோம். ஆதலால், தெய்வ வடிவங்களைக் கல்லினால் செதுக்கி அமைக்கின்றார்கள்.

வேத சிவாகமங்களிலே ஆலய வழிபாட்டைப் பற்றிச் சொல்லியிருக்கிறது. இறைவன் எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்து இருக்கின்றான். ஆனால் வேதாகம மந்திரங்களினாலே நிறுவப்பெற்ற கோவில் மூலத்தானத்திலே விசேஷமாக இருக்கின்றான். இறைவன் தனது அகண்டாகாரமான சக்தியை ஒரு விக்கிரகத்திற்குள் நிலை பெறச் செய்துகொண்டு அடியவர்களுக்கு அருள்பாலிக்கின்றான்.

வெயிலிலே பஞ்சை வைத்தால் வெப்பமான சூடு ஏறும். அதனால் வெதும்பும். வெந்து போகாது. சூரிய காந்தக் கண்ணாடியின் கீழே வருகிற வெயிலிலே பஞ்சை வைத்தால் எரிந்து சாம்பலாகிப் போகும். நேர் வெயிலுக்குப் பஞ்சை எரிக்கிற ஆற்றல் இல்லை. சூரிய காந்தக் கண்ணாடியின் கீழே வருகிற வெயிலுக்குப் பஞ்சை எரிக்கிற ஆற்றல் உண்டு. என்ன காரணம்?

பரந்து விரிந்து இருக்கின்ற சூரிய ஒளியை ஈர்த்துச் சேர்த்து அனுப்புகிறது சூரிய காந்தக் கண்ணாடி. அதுபோல் எல்லா இடங்களிலும் பரந்து விரிந்து இருக்கின்ற இறைவனுடைய சக்தியை ஈர்த்துச் சேர்த்து அனுப்புகிறது மூலத்தானத்திலுள்ள மூர்த்தி.

ஏனைய இடங்களில் இறைவனை வழிபட்டால் வினைகள் வெதும்பும். ஆலயத்திலுள்ள மூர்த்திக்கு முன் வழிபட்டால் வினைகள் வெந்துபோகும். அதனாலேதான் ஔவையார், "ஆலயந் தொழுவது சாலவும் நன்று" என்கிறார். ஆகவே, நாயன்மார்களும் ஞானிகளும் இந்த உலகம் உய்ய அமைத்தவை ஆலயங்கள். அந்த ஆலயத்திலே கருவறையில் சுவாமி மந்திர வடிவாக இருந்து ஆன்மாக்களுடைய மல, மாயா, கன்மங்களை நீறாக்கி அருள்புரிகின்றான்.

மந்திர ஒலிக்கு ஆற்றல் அதிகம். மந்திரம் சொன்னால் பாம்பு கடிக்காது. கடித்த விஷம் இறங்கும். சில திருடர்கள் மந்திரம் சொன்னால் நாய் குரைக்காதாம். ஆகையினால்தான் பெரியவர்கள் வேத மந்திரத்தினாலே இறைவனை வழிபட்டார்கள்.

வேதத்தின் மந்திரத்தால் வெண்மணலே சிவமாக, போதத்தால் வழிபட்டான் புள்ளிருக்கு வேளூரே. என்பது ஞானசம்பந்தப் பெருமான் வாக்கு.

ஆகவே, கோயிலிலே சென்று சேவிக்க வேண்டும். இறைவனுடைய அருளைப் பெற்ற மகான்களாக இருந்தாலும் ஆலய வழிபாடு அவசியம் செய்ய வேண்டும். "மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கோர், வார்த்தை சொல சற்குருவும் வாய்க்கும் பராபரமே" என்பார் தாயுமானவர்.

"கால்களாற் பயனென் கறைக் கண்டன் உறை கோயில், கோலக் கோபுரக் கோகரணஞ் சூழாக் கால்களால் பயனென்" என்பார் அப்பர் பெருமான். "மாலற நேயம் மலிந்தவர் வேடமும் ஆலயந்தானும் அரனெனத் தொழுமே" என்பது சிவஞான சூத்திரம். நால்வராதிகள் எல்லாம் தலயாத்திரை மேற்கொண்டு ஆலய தரிசனம் செய்து வழிபட்டார்கள்.

ஆகவே கல்லினால் திருவுருவத்தை அமைத்துத் தானிய வாசம், ஜல வாசம் வைத்து அந்த மகாதேவனுடைய மந்திரங்களை எழுதி மந்திர யந்திரத்தை 48 நாள் வழிபாடு செய்து அதை அந்த மூர்த்திக்குக் கீழே வைப்பார்கள். அந்த மந்திர சக்தி மேலே கீழே வரும். அந்த வேத சிவாகமத்திலே வல்லவர்களாக இருக்கின்ற அந்தணர்கள் யாகசாலை அமைத்து இனிய மந்திரங்களை ஓதி, காலங்கள் தோறும் யாகாக்கினி வளர்த்து அதில் ஜோதியை விளையுமாறு செய்கிறார்கள். அப்படி விளைந்த ஜோதியைக் கும்பத்திலே சேர்ப்பார்கள். கல்லினாலும் மண்ணினாலும் சுதையினாலும் மனிதரால் உருவாக்கப்பட்டவை விக்கிரகங்களாகும். அவற்றிற்கு தெய்வ சாந்நியத்தை உண்டுபண்ணுவதற்காகச் செய்யப்படும் பல கிரியைகளில் ஒன்றுதான் கும்பாபிஷேகம்.

சித்தாந்தரத்தினம். திருமதி. நா. பராசக்தி.

13 ஆம் பக்க தொடர்ச்சி....

இம்மைக்கும் மறுமைக்கும் அவள் உனக்குத் துணையாக நிற்கிறாள்.
மனைவி உனக்குச் செய்யும் பணிவிடைகள் உன் கண்ணுக்குத் தெரிவதில்லை.

அறம் :- மானிடராய்ப் பிறந்த நாம் மனம், மொழி, மெய் ஆகிய மூன்றாலும் அறம் புரிய வேண்டும்.

1. மனத்தால் செய்யும் அறம் கடவுள் உணர்வும் நற்சிந்தனையும் ஆகும்.
2. மொழியால் செய்யும் அறம் ஆண்டவன் திருநாமம் ஓதிப் புகழ் பாடுதலும், பிறருக்குத் துன்பம் தராத மொழிகளைக் கூறுதலுமாகும்.
3. உடலால் புரியும் அறம் பதியை மலர் கொண்டு பரவுதல், அடியார்க்குத் தொண்டு புரிதல், பிற உயிர்கட்கு நன்மை செய்தலாகும்.

சித்தாந்தரத்தினம். பத்மினி ராஜேந்திரா.

# புராணபடனமும் மலேசியா அருள்நெறித் திருக்கூட்டமும்

புராணம் என்பது பழமையான வரலாறு கூறுவது எனப் பொருள்படும். சைவசமய மரபிலே புராணங்களுக்குச் சிறப்பானதொரு தனித்துவமுண்டு. வேதஇலக்கிய காலத்திற்கு முன்னரே புராணங்கள் இருந்திருக்கின்றன என அறிஞர்கள் கருதுகின்றனர்.

சாந்தோக்கிய உபநிடதத்திலே

"சதுர்த்த இதிஹாஸ புராணம்
பஞ்சமம் வேதாநாம் வேதமிதி" என்ற குறிப்பைக் காணலாம்.

ஆபஸ்தம்ப தர்மசூத்திரத்திலே பவிஷ்ய புராணத்திலிருந்து மேற்கோள் காட்டப்பட்டுள்ளது.

புராணங்கள் மூலம் சமயஅறிவு வளர்ச்சியுற்றது. சைவகலாசாரம் மேலோங்கியது. மக்களிடையே சைவவாழ்வு சிறந்தது.

புராணங்கள் வரிசையிலே மகாபுராணம் எனப்படும் பதினெண்புராணங்கள் முதன்மை பெற்றவை. மேலும் தல புராணம், இறைவனின் லீலைகளைக் கூறும் புராணம், அடியவர் வரலாறு கூறும் புராணம், எனப் பலபுராணங்கள் எழுந்தன.

மூர்த்தி, தல, தீர்த்தச் சிறப்புக்களைக் கூறுவது தலபுராணம். கோயிற்புராணம், காஞ்சிப்புராணம் முதலியன தலபுராணங்களாகும். புராணங்களை மான்மியம் என்றும் அழைப்பதுண்டு. (சிதம்பர மான்மியம், திருக்கேதீச்சர மான்மியம்).

இறைவனின் அருள் விளையாடல்களைக் கூறுவது திருவிளையாடற்புராணம், விநாயகபுராணம், கந்தபுராணம் என்பன.

அடியவர் வரலாறு கூறும் புராணங்கள் பெரியபுராணம், திருவாதவூரடிகள் புராணம், சேக்கிழார்புராணம் போன்றன. புராணங்கள் யாவும் பத்திய (பாடல்) வடிவில் உள்ளதால் அவற்றைச் சாதாரணமான (பாமர) மக்கள் படித்தறிய முடியாது. அவற்றை யாபேரும் அறிந்து கொள்ளும் வண்ணம் புராணபடனம் நடைபெறுகின்றது. புராணபடனத்திற்கென விதிமுறையுண்டு. ஒருவர் புராணச்செய்யுள்களை இசையுடன் வாசிக்க மற்றவர் வாசிக்கப்படும் அதே இராகத்தில் பொருள் கூறுவார். பொருள் கூறுவதை பயன் சொல்லுதல் எனவும் அழைக்கப்படுவதுண்டு.

புராணபடன மரபு யாழ்ப்பாணத்திலே பன்னெடுங்காலமாக பயின்று வருகிறது. காஞ்சிபுரத்திலே கந்தபுராணம் அரங்கேறிய காலத்திலே, கச்சியப்ப சிவாசாரியாரின் சகபாடியான கச்சிக்கணேசையரால் யாழ்ப்பாணத்தில் புராணபடனம் செய்யப்பட்டது. ஆறுமுகநாவலர் காலத்திலே மீண்டும் சிறப்புற்றது. அக்காலத்திலே எழுத்தறிவற்ற பெண்கள்கூடப் புராணபடனத்தைக் கிரமமாய்க் கேட்டதன் பயனாக சைவசமய அறிவு நிரம்பப் பெற்றனர்.

இலங்கையிலே யாழ்ப்பாணம், மட்டக்களப்பு போன்ற இடங்களில் பாரம்பரியமாக நடைபெற்று வந்த புராணபடனம் இப்போது இலங்கையின் பலபாகங்களிலும் சிறப்புற நடைபெற்று வருகின்றது.

அதேபோன்று மலேசியாவிலும் ஸ்கொட்றோட் கந்தசுவாமி கோயில் ஆதீஸ்வரன் கோயில் அருள் நெறித்திருக்கூட்டம் மற்றும் பரஞ்சோதி விநாயகர்

ஆலயம் போன்ற பல இடங்களில் புராணபடனம் நடைபெற்றுவருகின்றது.

அருள் நெறித்திருக்கூட்டத்தில் நடைபெறும் திருவாதவூரடிகள் புராணபடனம் ஏனைய இடங்களில் நடைபெறுவதைவிட மிகச் சிறப்பாக நடைபெறுவதை இங்கு குறிப்பிட்டேயாக வேண்டும். இங்கு 1985ஆம் ஆண்டளவில் திரு அ. ஆறுமுகம் (FACCA) அவர்களால் திருவாதவூரடிகள் புராணத்தில் புத்தரை வாதில் வென்ற சருக்கம் படிக்கப்பட்டது. பின்பு 2005ல் திரு ஐ .குலவீரசிங்கம் ஐயா அவர்களின் முயற்சியால் திருவாதவூரடிகள் புராணம் வெளியிடப்பட்டது. அவ்வருடத்திலேயே திருவெம்பாவைக் காலத்தில் திருவாதவூரடிகள் புராணபடனம் ஆரம்பிக்கப்பட்டது. மலேசியா திரு எஸ். கணேஸ்வரன் பாடல்களைப் படிக்க நான் பொருள் கூறும் பாக்கியத்தைப் பெற்றேன். தொடர்ந்து ஐந்து வருடகாலம் இருவரும் சேர்ந்து புராணபடனம் செய்தோம். 2010ஆம் ஆண்டு திரு ஏ. அனுசாந்தன் அவர்களும் நானும் புராணபடனம் செய்தோம். அடுத்த இரண்டு வருடங்கள் அவுஸ்திரேலியா திரு சு.பத்மநாதன் அவர்களுடன் இணைந்து புராணப்படிப்பைத் தொடர்ந்தோம். தொடர்ந்து 2013ஆம் ஆண்டு திரு வே.கனகசபாபதி பாடல்களை வாசிக்க நான் பயன் சொன்னேன். அடுத்த வருடம் திரு கு. பாலசண்முகன் பாடல்களைப்படிக்க புராணபடனம் தொடர்ந்தது. 2015ல் பேராசிரியர் க.சிவானந்தமூர்த்தி பாடல்களைப் படிக்க அவருடன் இணைந்து புராணப் படிப்பு தொடர்ந்தது.

பதினொரு வருடங்களாகச் சிறந்தமுறையில் மரபுமாறாது அருள்நெறித்திருக்கூட்டத்திலே திருவாதவூரடிகள் புராணபடனம் நடைபெறுகின்றது. தினம்தோறும் அடியார்கள் பலர் கலந்து சிறப்பிப்பது மகிழ்ச்சிதரும் ஒன்றாகும். ஏனையஇடங்களைவிட இங்கு வரும் அடியார்கள் ஆசாரசீலர்களாக சிவசின்னம் தரித்து அமைதியாய் இருந்து கேட்கிறார்கள். இச்சிறப்பிற்குக் காரணம் ஒன்று இந்த இடத்தின் புனிதத்தன்மை, இன்னொன்று புராணபடனம் கேட்க வருபவர்கள், இப்புராணத்தை நன்கு அறிந்து சைவசமய அறிவு பெற வேண்டும் என்ற ஆவலுமாகும். இவர்களில் பலர் சிவபூசை செய்பவர்கள் என்பது குறிப்பிட்டுக் கூறவேண்டியதொன்று. இவற்றிற்கு அப்பால் இப்புராணபடனம் சிறப்பாக நடைபெறவேண்டும் என்று இந்நிகழ்வை ஆரம்பித்து வைத்த திரு ஐ. குலவீரசிங்கம் ஐயா அவர்களின் விடாமுயற்சி. இவரின் உந்துதலாலேதான் இப்புனிதப்பணி தொடர்ச்சியாகத் தளர்வின்றி சிறப்புற நடைபெற்று வருகின்றது.

அருள் நெறித்திருக்கூட்டத்திலே திருமுறை வகுப்புக்கள், சைவசித்தாந்தப் பயிற்சி நெறி, சமயச் சொற்பொழிவுகள், குருபூசைகள், விழாக்கள், கலந்துரையாடல்கள் எனப் பல நிகழ்வுகளின் ஓர் அங்கமாகப் புராணபடனமும் நடைபெறுவது சிறப்பானதேயாம்.

வேதாகமம் ஓதப்படும் இடம், திருமுறைப்பாராயணம் நிகழும் இடம், புராணபடனம் நடைபெறும் இடம் ஆகிய இவ்விடங்களில் தெய்வசாநித்தியம் என்றும் நிலைத்திருக்கும்.

தெய்வசாநித்தியம் நிறைந்து விளங்கும் அருள்நெறித்திருக்கூட்டத்தின் சமயப்பணி மேலும் சிறப்புறக் கூத்தப்பிரானைப் பிரார்த்திக்கிறேன்.

*சித்தாந்தச் செம்மணி , சைவப்புலவர், செல்லையா நவநீதகுமார்* M.A

# விருந்து

**இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி**
**வேளாண்மை செய்தற் பொருட்டு**

- திருக்குறள் -81

**இல்லறத்தானின் முதற்கடமை விருந்தினரை உபசரித்தலேயாகும்.**

இந்தக் கருத்தை வலியுறுத்தும் இனிய வரலாறு அடியில் வருமாறு.

விருந்து என்றால் புதுமை என்று பொருள். புதியவராகத் தம் வீடு தேடி வந்தவர்களுக்கு விருந்து என்று பேர். அவ்விருந்தினர் இரு வகையினராம். முன்னறி முகமற்று வந்தோரும் அஃதின்றி வந்தோருமாவர். மனையாளோடும் கூடி இல்லத்தின் கண் இருந்து மனைவி மக்கள் முதலியோரைக் காப்பாற்றி வாழ்வது எதன் பொருட்டு எனில் தனது வீடுதேடி வருகின்ற விருந்தினரைப் பேணி அவர்களுக்கு உபகாரம் செய்வதற்கேயாம்.

விருந்தினர்கள் வந்து தங்குவதற்கென்றே நம் முன்னோர்கள் வீடு கட்டுகின்றபோது திண்ணையென்று ஒரு பாகத்தை ஒதுக்கி வைத்தார்கள். மழைக்கு ஒதுங்கவும், ஏழைகள் படுக்கவும், விருந்தினர் இருந்து இளைப்பாறவும் திண்ணை உபயோகமாகும். விருந்தினர் என்றால் யாவர்? உலகில் அநேகர் தங்கள் வீட்டில் மாமனோ, மைத்துனனோ, வேறு பந்துக்களில் ஒருவரோ வந்தால் விருந்து வந்தது என்று கூறுகின்றனர். உறவினரும் சிநேகிதரும் விருந்தினரல்லர். புதியவராக வந்தவரே விருந்தினராம். அங்ஙனம் வந்த விருந்தினரைப் புறத்தில் வைத்துவிட்டு இறவாத தன்மையை நல்கும் தேவாமிர்தமேயாயினும் உண்ணப்படாது.

நாள்தோறும் தன்னை நோக்கி வந்த விருந்தினரை உணவு கொடுத்து உபசரித்துப் பாதுகாப்பவனுடைய இல்வாழ்க்கையானது வறுமையினால் துன்புற்று வருந்தாது, பொருள் கிடைத்தவுடன் அப்பொருளை வறிதே புதைத்து வைக்காது விருந்தினரைக் கண்டவுடனே இனிய முகத்துடன் நல்வரவு கூறி அவர்கள் பசியைத் தீர்த்து உதவி செய்வானது மனையின்கண் திருமகள் (இலட்சுமி) தான் தந்த பொருளை நல்வழியில் செலவு செய்கிறானென்று மேலும் நிறைந்த செல்வத்தைத் தந்து மனம் பொருந்தி வீற்றிருப்பாள்.

விருந்தோம்புவான் வீட்டில் திருமகள் என்றும் இருந்து துணைசெய்தல்போல், நிலமகளும் துணை செய்வாள். ஒரு விருந்து வந்தால் "திண்ணையிலிரு; நாங்கள் உண்டு மிகுந்தால் போடுகிறோம்" என்று சிலர் சொல்லுகிறார்கள்; அது தவறு. விருந்தினரைப் பசியோடு இருக்க வைத்து ஒருபோதும் உண்ணப்படாது. முன்னே விருந்தினரை உண்பித்துப் பின்னர் மிகுந்திருக்கும் உணவை உண்ணுவோனுடைய

விளைநிலம் வித்திடாமலே விளையும். ஒரு சிலருடைய வயலில் பயிர் சாவியாகிவிடுகிறது. ஒரு சிலருடைய வயல் நன்றாக விளைகிறது. இதற்கு என்ன காரணம்? முற்பிறப்பிலும் இப்பிறப்பிலும் விருந்தோம்புவான் விளைநிலம் நல்ல பயனைத் தருகிறது. விருந்தினரைக் கடிந்து பேசித் துரத்தினோனது வயலில் விருந்தினர் முகம் வாடியது போல் பயிரும் வாடிப் பயனைத் தருவதில்லை. "பண்ணிய பயிரில் புண்ணியம் தெரியும்'' என்ற முது மொழியையும் உற்று நோக்குக.

இல்வாழ்வான் அவசியம் செய்யத்தக்க ஐம்பெரும் வேள்விகள் என்பவை

1. பிரம வேள்வி : வேதமோதல்
2. பிதிர் வேள்வி : பிதிர்க்கடனாற்றல்
3. தேவ வேள்வி : தேவதைகளைக் குறித்துத் தீ வேட்டல்
4. பூத வேள்வி : காக்கைக்கிடுதல் முதலியன
5. மானுட வேள்வி : விருந்தோம்பல்

**"ஒண்பிரம மேவேத மோதுதல்ஓ மம்வளர்த்தல்**
**எண்தெய்வம் ஈதல்பலி யேபூதம் - ஒண்டொடியீர்**
**எண்ணீர்க் கடனாற்ற லேபிதிர்வி ருந்தோம்பல்**
**அண்ணீர்மை மானுடயா கம்".**

இப்பஞ்ச மகா யாகங்களில் விருந்தோம்பல் என்னும் மானுட யாகமே மிகவும் முக்கியமாம். இல்வாழ்வோர் ஒவ்வொருவரும் அதனை அவசியம் செய்யவேண்டும். தன்னிடத்தில் வந்த விருந்தினரைப் பேணி இன்னும் விருந்து வருமோ என்று எதிர்பார்க்கும் உத்தமன் வானுலகம் செல்லுங்கால் தேவர்கள் நமக்கு நல்ல விருந்தென்று எதிர்கொள்வர். எனவே, விருந்தை இகழாது உபசரிப்பான், இம்மையிலும் மறுமையிலும் இன்பத்தையடைவான். வடவைத் தழல் போன்று அக்கினியாறு எதிர்ப்பட்டபோது சந்திரவதி 'என் வீடு தேடி வந்த விருந்தினரை இகழ்ந்திருந்தது உண்டேல், என்னைச் சுடுவாயாக' என்று அவ்வக்கினியாற்றில் பாய்ந்தனள். அக்கினி பன்னீர்போற் குளிர்ந்திருந்தது. விருந்தோம்பலின் பெருமைதான் என்னே! என்னே! செல்வமுடையோர்கள்தாம் விருந்தினரை உபசரித்து உணவளிக்க வேண்டும் என்பதில்லை; வறிஞர்களும் விருந்தோம்ப வேண்டும். "வறிஞர்க்கழகு வறுமையிற் செம்மை'' என்ற நறுந்தொகைப்படி எத்தனை சிரமமிருந்தாலும் - நித்திய தரித்திரர்களாக இருப்பினும் தமது சக்திக்குத் தக்கவாறு விருந்தினரை உபசரிக்க வேண்டும். குசேலரைக் காட்டிலும் தரித்திரர் இல்லை. இருபத்தேழு மக்களுடன் குசேலருடைய மனைவியார் தரித்திரத்தாலே எவ்வளவு துன்புற்றனர்? அவ்வம்மையார் தன் வீடு தேடி வந்த விருந்தினருக்கு இல்லையென்று கூறவில்லை என்றால் என்னே அவ்வம்மையாரின் கருணை! அந்த மாதரசியைப் பற்றி அந்நூலாசிரியர் புகழ்ந்துரைக்குமாறு காண்க

**"மாசிலாக் குலத்து வந்தாள் வருவிருந் துவப்ப வூட்டு**
**நேசமிக் குடையாள் கொண்க னினைப்பறிந் தொழுகு நீராள்"**

பண்டைக்காலத்தில் பறவைகள்கூட விருந்தோம்பியுள்ளன. ஈண்டு அவ்வரலாறுகளில் ஒன்றைக் கூறுவோம்.

ஒரு பெரிய வனத்தில் கொடிய வேடன் ஒருவன் இருந்தனன். இனிய ஓசைகளைச் செய்து, பறந்து வானத்தை வனப்புறப் புரியும் பறவைகளையும் விலங்குகளையும் கொல்வதே அவனுடைய தொழில். கருத்த உடம்பும் சிவந்த கண்களுமுடையோனாய் வில்லையும் அம்பையுமேந்திய கரத்துடன் கூற்றுவனைப்போல் அவன் வனத்தில் உலாவிப் பல உயிர்களுக்குத் தீங்கு புரிந்து கொண்டிருந்தனன். அவன் ஒரு நாள் நாற்புறத்தும் பெருமலைகள் சூழ்ந்துள்ள மலைச் சரிவில் வேட்டையாடிக் கொண்டிருந்த சமயத்தில் திடீரென மேகங்கூடி பேரிடியுடன் பெருமழை பொழிந்தது. எங்கணும் நீர் மயமாயிற்று; வழிகளெல்லாம் காட்டருவிகளாயின. மேட்டுப் பாங்கரில் சிங்கம் முதலிய பெரு மிருகங்கள் இருந்து ஒலித்தன. இந்த ஆபத்தான இடத்தில் மழையாலடிக்கப்பட்ட வேடனுடைய உடலும் உடையும் நனைந்து ஈரமாயின. எனினும், அவன் மனத்தில் மட்டும் சிறிதும் ஈரம் ஏற்படவில்லை. அத்தருணத்தில் ஒரு பெண்புறா காட்டாற்றில் அகப்பட்டு ஒருவாறு கரையில் ஒதுக்கப்பட்டுக் குளிரால் வாடி, இறகுகள் நனைந்து, பறக்கும் தன்மையற்றுக் கிடந்தது. அதைக்கண்ட வேடன், உடனே அதை எடுத்துச் சற்றும் கருணையின்றித் தனது கூட்டிற்குள் அடைத்துக் கொண்டனன்.

பின்னர், மழை விட்டவுடன் மெல்ல நடந்து அவ் வனத்தின் மையத்திலுள்ள பெரிய மரத்தினிடம் சென்றனன். அத்தரு பல கிளைகளுடன் வானுறவோங்கி வளர்ந்து பல பறவைகளுக்கு உறைவிடமாகி நிழலையும் ஆதரவையும் தருவதாயிருந்தது. குளிரால் வாடிய வேடன், அத்தருவினடியில் சென்று சற்று இளைப்பாறினன். மேகங்கள் விலகி விண்ணிடை உடுக்குலங்கள் (நட்சத்திரங்கள்) ஒளி செய்தன. வேடனுடைய வீடு நெடுந்தூரத்திலிருந்தபடியால் அவன் வீட்டிற்குச் செல்ல முடியாதவனாகி, அவ்விரவை அத்தருவினடியிலேயே கழிக்க எண்ணினன். அச்சமயம் அத்தருவின் மேலிருந்த ஆண் புறாவானது கண்ணீர் சொரிந்து புலம்பலுற்றது. "அந்தோ! என்னருமை மனையாளே! நீ இன்னும் திரும்பி வரவில்லையே! உனக்கு யாது விபத்து நேர்ந்ததோ? மழையில் அகப்பட்டுக் கொண்டு எங்கு தவிக்கின்றனையோ? ஒளியுடைய மலர்ந்த கண்களும், தேன் போன்ற இனிய குரலும், மிருதுவான சிறகும் உடைய உன்னைத் துறந்து இவ்வுலகில் எனக்கு என்ன வாழ்விருக்கிறது. இதுகாறும் நீ கூட்டிற்கு வராமல் எங்குற்றனை? யான் உண்டபின் நீ உண்பாய்; யான் மகிழ்ந்தால் நீ மகிழ்வாய்; யான் வருந்தினால் நீ வருந்துவாய்; எனது சுகதுக்கங்களை உன்னுடையதாக எண்ணுகின்ற உன்னையொழித்து யான் உயிர் தரியேன்; நீ இல்லையேல் இது வீடன்று; நான் ஒரு சமயத்தில் கோபித்தாலும் நீ இனிய ஒழுக்கத்தால் சாந்தப்படுத்தி உபசரிப்பையே! இல்வாழ்வானுக்குச் சிறந்த மித்துரு பத்தினியல்லவா? நீ எங்குற்றனை?" என்று பலவாறாகப் புலம்பிற்று. இவற்றை வேடனும் அவ்வேடன் கூட்டிற்குள் அடைபட்டிருந்த புறாவின் மனைவியாகிய பெண் புறாவும் கேட்டார்கள். பெண் புறா, தன் நாயகன் தன்மீது வைத்துள்ள அன்பை நினைத்து மகிழ்ந்து ஆண் புறாவை நோக்கி,

"ஆர்வல! நான் வினைவயப்பட்டு இவ்வேடனுடைய கூட்டில் அடைப்பட்டிருக்கிறேன்; நாம் வாழுகிற இடத்திற்கு இவ்வேடன் அதிதியாக வந்திருக்கிறான்; வந்த விருந்தினரைப் பேணுவது இல்லறத்தாரின் கடமை. வேடன் குளிரால் வருந்திப் பசியால் வாடியிருக்கிறான்; வீடு தேடி வந்த விருந்தினரை நாயகனும் நாயகியும் சேர்ந்து உபசரிக்க வேண்டும்; தங்கள் பத்தினியாகிய என்னை இவ்வேடன் கூட்டில் வைத்திருக்கிறான். தாங்கள் வேடனுடைய குளிரை நீக்கி உணவைக் கொடுத்து உபசரியும்; ஓர் அதிதி எந்த இல்லறத்தானிடத்தில் வந்து பட்டினியாக இரவைக் கழிக்கிறானோ அந்த இல்லறத்தான் மீளா நரகத்திற்கு ஆளாகிறான். பட்டினியாய்க் கழிக்கும் அந்த அதிதியுடைய பாவத்தில் பாதியையும் பெற்றுக் கொள்கிறான்; விருந்தினரது பசியை நீக்கிப் பாதுகாத்தவன் புத்தேளிர் வாழு முலகிற் புகுவான். எனவே, தாங்கள் அதிதி பூஜையைப் புரிந்து இகபர நலனை எய்தும்" என்று கூறியது.

இந்தத் தரும வசனங்களைக் கேட்ட ஆண் புறா, தன் பத்தினி கூட்டில் அடைப்பட்டிருப்பதைக் கண்டு வருந்தி, தனக்கு இடர்செய்த வேடனை அதிதியாக உதவி செய்யக் கடப்பாடுடையோம் என்று அவனுக்கு உணவு தருமாறு வேண்டும் தன் பத்தினியின் உயர்குணங்களை எண்ணிப் பெரு மகிழ்வுற்று, அதிதிகளை ஆராதிப்பதே சிறந்தது என்று மரத்தை விட்டிறங்கி வேடனை நோக்கி, "ஐயா! உமக்கு நல்வரவு, எமது வீட்டிற்கு வந்த நீர் பட்டினியிருப்பது நலமன்று; சற்றுத் தாமதியும்" என்று முகமன் கூறி, உலர்ந்த சருகுகளையும் சிறு குச்சிகளையும் ஒன்றாகக் குவித்து அருகிலிருந்த சிற்றூருக்குச் சென்று ஒரு கொள்ளித் துரும்பை அலகினால் கவ்விக் கொண்டுவந்து குவித்து வைத்த சருகுகளின் மத்தியில் வைத்துச் சிறகால் காற்று வர விசிறி நெருப்புண்டாக்கி, "ஐயா! இந்த நெருப்பினருகிலிருந்து குளிரை நீக்கிக்கொள்ளும்" என்றது. வேடன் அதன் அன்பையும் ஆதரவையும் எண்ணி உள்ளம் மகிழ்ந்து தீக்காய்ந்து குளிரை நீக்கிக் கொண்டான். அவன் தீக்காய்ந்து கொண்டிருக்குங்காலை புறா சிறு சிறு குச்சிகளைக் கொண்டுவந்து நெருப்பில் போட்டுக் கொண்டேயிருந்தது. பின்னர், ஆண் புறா வேடனைப் பார்த்து, "ஐயா! பகற்காலமாக இருந்தால் பழங்களைக் கொண்டுவந்து உமக்கு உணவாகத் தருவேன். இந்த இராப்பொழுதில் வேறு உணவைத் தேடிக் கொடுக்க முடியாது; விருந்தினரைப் பேணி உணவு கொடுத்து ஆதரிப்பதைக் காட்டிலும் சிறந்த அறம் வேறு இல்லை என்று பெரியோர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். இதோ, எரிகின்ற நெருப்பில் வீழ்ந்து மடிகிறேன்; என்னுடைய மாமிசத்தைப் புசித்துப் பசிப் பிணியை நீக்குதி" என்று இனிமையாகக் கூறி அக்கினியை வலம் வந்து அதில் வீழ்ந்து மடிந்தது.

அது கண்ட வேடனுக்கு நல்லுணர்வு தோன்றியது. அந்தப் புறாவின் அன்பையும் அறத்தையும் விருந்தை உபசரிக்கும் பெருந்தகைமையையும் எண்ணி எண்ணி இறும்பூதுற்றான். அந்தப் புறாவின் செயற்கருஞ்செயல் வேடனுடைய, கடின சித்தத்தைக் கரைத்து உருக்கியது. அவனது மனதில் நெடுநாளாகத் தழைத்திருந்த கோபம், கொலை, குரூரம், கொடுமை முதலிய மரங்களை வேரோடு பிடுங்கி

எறிந்தது. அன்பு ஊற்றெடுக்க ஆரம்பித்தது. "அந்தோ! நான் இத்தனை நாளாகக் கொடிய பாவமாகிய கொலைத் தொழிலைப் புரிந்து மீளா நரகத்திற்கு வழி தேடிக் கொண்டேனே. எத்தனை உயிர்களைப் பதைக்கப் பதைக்கக் கொன்றேன்? கருணை சிறிதுமில்லாப் பாவியானேன்; ஆ! ஆ! இந்தப் பறவையின் உத்தம குணத்தை யாரே மறக்க முடியும்? மனிதனாகப் பிறந்த என்னிடத்தில் இந்தப் பரோபகாரம் இல்லையே? நான் மனிதனல்லன்; விலங்கானேன். இப்புறா பறவையன்று; உயர்ந்த மனிதன். ஏ பறவையே! நீயே எனக்குச் சற்குரு. ஒரு கணத்தில் என்னுடைய கடின சித்தத்தைக் கரைத்து நல்லுணர்வை நல்கினாய். இனி நான் ஓர் உயிருக்கும் தீங்கு புரியேன். கொலைத் தொழிலை இக்கணமே ஒழித்தேன். மறந்தும் பிறன்கேடு சூழேன். இதுகாறும் புரிந்த எண்ணிறந்த மறச் செயல்களுக்கும் பரிகாரம் தேடுவேன்" என்று கண்கலுழ்ந்து கதறியவண்ணமாய் வாய் விட்டுப் புலம்பிக் கரத்திலிருந்த வில்லையும் கூரிய கணைகளையும் இரும்புக் கூடுகளையும் வலைகளையும் வீசி எறிந்தான். கூட்டிலிருந்த பெண் புறாவையும் விட்டுவிட்டனன். தான் செய்த தீச்செயலை எண்ணி எண்ணி, மனம் வருந்தி நின்றனன். கூட்டிலிருந்து வெளிப்பட்ட பெண் புறா கணவனிறந்த சிதாக்கினியை வலம் வந்து கதறியழுது "ஆ! என் உயிர்க் காதல! உன்னைப் பிரிந்து இவ்வுலகில் யான் வாழேன்; பெண்களுக்குக் கணவனே கடவுள்; கணவனே கதி; கணவனே வாழ்வு; கணவனைப் பிரிந்து உயிர் வாழ மாட்டார்கள்; நீ சென்ற வானுலகத்திற்கு யானும் வருகிறேன்" என்று புலம்பி வேடனை நோக்கி, "ஐயா! நீயோ மிகவும் பசித்திருக்கின்றனை; என்நாயகனது இறைச்சியால் உன் வயிறு நிரம்பாது. யானும் இத்தீயில் வீழ்கிறேன்; என்னையும் உண்டு இளைப்பாறுவாய்! அதிதிகளைப் பூசிப்பதே எனது கடமை" என்று மொழிந்து நெருப்பில் வீழ்ந்திறந்தது.

உடனே, அவ்விரு பறவைகளும் விருந்தோம்பலின் பயனாகச் சூட்சும உருவத்துடன் வானோர் எதிர்கொள்ள சுவர்க்க லோகத்திற்குச் சென்றன. அக் காட்சியைக் கண்ட வேடன் வியப்புற்று விருந்தோம்பலின் பெருமையையுணர்ந்து, சதிபதிகளின் ஒற்றுமையையும், பரோபகாரத்தின் தகைமையையும் எண்ணி நல்வழிப்பட்டு, முற்றிய எண்ணமுடையவனாய் ஈசுவரனை நோக்கித் தவம் புரிவானாயினன்.

**பேடையைப் பிடித்துத் தன்னைப் பிடிக்கவந் தடைந்த பேதை**
**வேடனுக் குதவி செய்து விறகிடை வெந்தீ மூட்டிப்**
**பாடுறு பசியை நோக்கித் தன்னுடல் கொடுத்த பைம்புள்**
**வீடுபெற் றுயர்ந்த காதை வேதத்தின் விழுமி தன்றோ!**

- கம்பராமாயணம்.

விருந்தோம்புதற் பொருட்டுப் பறவைகளாயிருந்தும் அப்புறாக்கள் எவ்வளவு அன்புடன் தமது உடல்களையே உணவாகக் கொடுத்தன. விருந்தோம்புவதைக் காட்டிலுஞ் சிறந்த தவமில்லை. செல்வம் வந்தவுடனே அதன் நிலையாமையை உணர்ந்து, இருக்கும்போதே பகிர்ந்தளித்துப் பல்லாரோடு உண்டு, இம்மை நலனையும்

தொடர்ச்சி 31ஆம் பக்கம். . .

சென்ற இதழின் தொடர்ச்சி

# யாப்பிலக்கணம்
# வினாவும் விடையும்

## சீர்

**20. ஒரு சொல்லுக்கும் (பதம்) சீருக்குமுள்ள பேதம் யாது?**

சீர் என்று சொல்லும்போது செய்யுளில் பிரித்துக் காட்டப்பட்டிருக்கிற தென்பதைக் கொண்டு தெரிந்து கொள்ளலாம் என நினைப்பது தவறாகும். நாமே சீரைப்பற்றி அறிய முயலவேண்டும். சீர்கள் அசைகளால் அமைக்கப்படுகின்றன. அசைகளின் வேறுபாட்டால் சீரும் வேறுபடும்.

அசை உண்டாவதற்கு மூலமாய் இருப்பது எழுத்து. சொல்லும் எழுத்துக்களாற்றான் உண்டாகிறது. எழுத்து என்பது எல்லா இலக்கணங்களுக்கும் அடிப்படையாகும். யாப்பிலக்கணத்தில் சிறப்பான அடிப்படை அசை என்பதை மறக்கமுடியாது. இந்த அசை எழுத்துக்களால் உண்டாகினாலும் இவை உண்டாகும் பேதங்களால் சீரும் வேறுபடும். சீருக்கு அங்கமாக அசை விளங்கும். சொல்லுக்கு (பதம்) அங்கமாக அசை விளங்குவதில்லை.

சீரானது செய்யுளில் யாப்பிலக்கண விதிக்கமைவாகவே வரும். "உடனாகிவந்தே" என்ற தொடரை ஈரசை கொண்ட சீரால் பிரித்தால் உடனா|கிவந்தே எனப் பிரியும். இந்த இடத்திற் "கிவந்தே" என்ற ஈரசைச் சீருக்குப் பொருள் காணமுடியாது. எனவே அசைகளுடன் கூடிவரும் சீர் ஓரசையுள்ள சீராகப் பிரிக்கப்பட்டாலும் உதாரணம் "தா" இந்த ஓரசைச்சீர் பொருளைத் தரும். எனவே சீரானது அதன் பொருளைத் தரக்கூடியதாகவும், பொருளைத் தரமுடியாமலும் இருக்கும். சொல் (பதம்) உதாரணம் "சட்டி". இது ஒரு சொல். இதன் பொருளை அறிய முடியும். இதிலிருந்து சொல்லுக்கும் (பதம்), சீருக்குமுள்ள பேதத்தை அறியலாம். சொல்லும் (பதம்), சீரும் ஒன்றே எனக் கருதக் கூடாது.

**21. அசைகளைப் பிரித்துத் தொகுத்தல் மூலம் சீர்கள் எவ்வாறு அமைக்கப்படும்?**

முதலில் அசைகளைப் பிரிப்பதற்கு "ஓடு" என இரு எழுத்துக்கள் கூடிவந்த சீரை உதாரணமாகக் கொள்வோம். ஓடு என அவதானமாக உச்சரிக்கும் போது "ஓ" என்னும் எழுத்துச் சிறிது தாமதித்தே "டு" என்னும் எழுத்துடன் சேரும். இவ்விதம் உச்சரிக்கும் போது காலதாமதம் ஏற்படுமிடங்களில் ஒவ்வொரு அசையாகப் பிரித்துக் கொள்ளலாம். உதாரணமாக ஓ| டு என உச்சரிக்கும் போது "ஓ" வுக்கும் "டு" வுக்கும் இடையில் உச்சரிப்பில் தாமதம் ஏற்படுகிறது. இத்தாமதம் ஏற்படுமிடத்தை ஓர் அசையாகப்பிரித்து "ஓ" எனப் பிரிக்கவும்

"டு" என்பது இன்னொரு அசையாகும். இப்பொழுது "ஓ" என்பது ஓர் அசையாகவும் "டு" என்பது இன்னொரு அசையாகவும் இரு எழுத்துக் களும் சேர்ந்து ஈரசைச்சீராகி ஓடு எனவரும். மேலும் சில உதாரணங்களை விளக்கத்திற்காக எடுத்துக் கொள்வோம்.

கிழான் - "கிழா" என்று உச்சரிக்கும் போது "கி" "ழா" என்ற இரு எழுத்துக்களும் உச்சரிப்பின் போது தாமதமின்றிச் சேர்கிறது. தாமதமின்றிச் சேருமிடத்துக் "கிழா" என்பது ஓரசையாகக் கணிக்கப்பட வேண்டும். "ன்" என்ற ஒற்றெழுத்து இங்கே கணக்கெடுக்கப் படுவதில்லை. "கிழான்" என்பது ஓரசையாகி நின்று சீர்களை உண்டாக்க உதவும். இங்கே கிழான் ஓரசைச்சீர் இங்கு "கி" ழா என்ற இரு எழுத்தும் உச்சரிப்பின் தாமதமின்றிச் சேரும்.

ஔ|வை - "ஔ" என்ற எழுத்தும் "வை" என்ற எழுத்தும் ஒன்றோடொன்று சேரும்படி உச்சரித்துப் பார்த்தால் இரு எழுத்துக்களும் ஒன்றோடொன்று சேர்வதில் தாமதம் உண்டாகும். இப்படித் தாமதம் ஏற்படுமிடத்து "ஔ" ஒரு அசையாகவும் "வை" இன்னொரு அசையாகவும் பிரித்து ஔ|வை என்ற ஈரசைச் சீரை உண்டாக்கும். பெட்டி - இங்கு "பெ" என்ற எழுத்தையும் "டி" என்ற எழுத்தையும் ஒற்றெழுத்தான "ட்" இரு எழுத்துக்களையும் ("பெ","டி") சேர்ப்பதில் நடுவே நின்று தாமதப்படுத்தும். இவ்விதம் விரைவில் சேர முடியாமையால் "பெட்" ஓர் அசையாகவும் "டி" இன்னோர் அசையாகவும் வந்து ஈரசைச் சீரைத் தோற்றுவிக்கும். இவ்வாறு பல அசைகள் ஒவ்வொரு சீரிலும் தனியே வருமிடத்து ஓரசைச் சீராகவும் இரண்டு அசைகள் வருமிடத்து ஈரசைச் சீராகவும் மூன்று அசைகள் வருமிடத்து மூவசைச் சீராகவும் நாலு அசைகள் வருமிடத்து நாலசைச் சீராகவும் அமையும். இவ்விதம் அமைந்த சீர்கள் மேலும் விரிவுபடுத்தி இனிவரும் வினா விடையில் அமைவதை அறியலாம்.

**22. சீர் என்றால் என்ன?**

நேரசை, நிரையசை ஆகிய இருவகை அசைகளும் தனித்தேனும் தனியே அல்லாமல் பல அசைகள் கொண்டு இணைந்தும், இலயம்பட இசைத்துச் சீர் போன்று நிற்பது சீரெனப்படும். இது தான்கொண்டு நிற்கும் அசையின் தொகைபற்றி, ஓரசைச்சீர், ஈரசைச்சீர், மூவசைச்சீர், நாலசைச்சீர் என நால்வகைப் படுமாயினும் செய்யுளுக்கு உரிமைகாட்டி நிற்கும் திறமும் பிறவும் நோக்கி

1) அகவற்சீர்
2) வெண்சீர்
3) வஞ்சிச்சீர்
4) பொதுச்சீர்
5) அசைச்சீர்

} என ஐந்து வகையாகவும் வழங்கப்படுகிறது. (எழுத்துக்கள் சேர்ந்து சொல் ஆவது போல அசைகள் சேர்ந்து சீர்களை உண்டாக்கும்.)

**23. ஓரசைச் சீர் எத்தனை? விளக்குக?**

ஓரசைச்சீர் என்பது ஓரசையால் உண்டாகி நேரசை அல்லது நிரையசையில் தனியே நின்று முடியும் சீராகும். (தனி நிரையசையில் ஒருசீரும், தனிநேரசையில் ஒருசீரும்) என 2 ஆகும். ஓரசைச் சீருக்கு உதாரணம் தா, நட. இவ்வோரசைச் சீரானது வெண்பாவின் இறுதி அடியில் இறுதிச் சீரில் வருமிடத்து தா - நாள், நட - மலர் என்னும் வாய்பாட்டைப் பெறும். "தா" என்பது நேரசை என்றோ, நட என்பது நிரையசை என்றோ குறிப்பிடப்படுவதில்லை. அதற்குரிய வாய்பாடே குறிப்பிடப்படும். நாள், மலர் என்பன ஓரசைச் சீருக்குரிய வாய்பாடாகும். உதாரணமாக

"ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வாய் எல்லாஞ் செயல்"

இக்குறள் வெண்பாவின் இறுதிச்சீர் "செயல்" என வந்துள்ளது. "செயல்" என்பதை நிரையசை அல்லது "செயல்" வாய்பாடு எனக்கூறுதல் பிழையாகும். மலர் வாய்பாட்டில் முடிந்ததென்க.

**24. ஓரசைச் சீர், வெண்பாவில் மட்டும்தான் வருமா?**

ஓரசைச் சீர் வெண்பாக்களின் ஈற்றடியில் இறுதியில் வரும். வேறு சில இடங்களிலும் வருவதுண்டு. தனியசை கொண்ட ஓரசைச் சீர், வெண்பாக்களில் வருமென்பதை மட்டும் இப்போது நினைவில் வைத்துக் கொண்டாற் போதும். ஓரசைச் சீருக்கு உதாரண வாய்பாடு, நாள், மலர் என்பனவாகும்.

**25. ஈரசைச் சீர் எத்தனை? உதாரணந் தந்து விளக்குக?**

ஈரசைச் சீர்கள் எப்பொழுதும் இரண்டு அசைகள் கொண்டிருக்கும். இது நான்கு வகையாகும். உதாரணம் தேமா என்று கூறும் போது "தே" என்பது 1ஆம் அசை. "மா" என்பது 2ஆம் அசை. இவ்விதமாக இரண்டு அசை கொண்டு வருவதும் ஈரசைச் சீர் ஆகும். இது தேமா வாய்பாடு எனப்படும். புளிமா என்னும் வாய்பாடினை எடுத்தால் "புளி" என்பதை 1ஆம் அசை என்றும் 'மா" 2ஆம் அசை என்றும் கூறவேண்டும். மேலே கூறிய இரண்டு வாய்பாடுகளும் (தேமா, புளிமா) இறுதியில் "மா" என்னும் அசையைப் பெற்று முடிதலால் மாச்சீர் என அழைக்கப்பட்டது. எனவே மாச்சீர் இரண்டாகும். இவ்வாறே "விளம்" என்பதை இறுதியாக உடைய நிரையசை இறுதியில் வந்து முடியும் வாய்பாடுகள் இரண்டு உண்டு. அவை

1. கூவிளம்
2. கருவிளம்

} இறுதிஅசை நிரையசையில் முடிந்திருத்தலைக் காண்க.

இறுதி அசை மாவுடன் (நேரசை)யுடன் முடிவுபெறும் சீர் தேமா, புளிமா என

இரண்டு வாய்பாடுகளும் இறுதியில் விளம் என்ற நிரையசையில் முடியும் கூவிளம், கருவிளம் என்ற வாய்பாட்டால் வரும் ஈரசைச் சீர் (விளச்சீர்) 2 ஆக மொத்தம் 4 ஈரசைச் சீர் என்க.

**26. பின்வருவன எச்சீரில் அடங்குமெனவும் எவ்வாய்பாடு பெறுமென்பதையும் கூறி விளக்குக? உதாரணம் நந்தி, அடைந்தான், கடற்கரை பன்மொழி**

1) நந்தி
2) அடைந்தான்
} இவைகளின் இறுதி அசையானது நேரசை பெற்று இரண்டு அசைகளோடு சேர்ந்து ஈரசைச் சீரில் அடங்குவதோடு மாச்சீர் என வழங்கும் தேமா, புளிமா என்ற வாய்பாட்டை முறையே பெறுகின்றன. (நந்தி - தேமா, அடைந்தான் - புளிமா)

3) கடற்கரை
4) பன்மொழி
} இவைகளின் இறுதியசை நிரையசை பெற்று ஒவ்வொன்றும் இரண்டு அசைகளைக் கொண்ட ஈரசைச் சீர் ஆகின்றன. கடற்கரை - கருவிளம், பன்மொழி - கூவிளம் என்ற வாய்பாட்டைப்பெறுகின்றன.

**27. மூவசைச் சீர் என்றால் என்ன? "காய்ச்சீர்" எவ்வாறு உண்டாகியது?**

இங்கே ஒவ்வொரு சீரிலும் மூன்று அசைகள் இடம்பெறும். மாச்சீர் இரண்டுடனும் (தேமா, புளிமா) காய் என்ற நேரசை சேர்வதாற்

1) தேமாங்காய்
2) புளிமாங்காய்
} என்னும் 2 மூவசைச் சீர் வாய்பாடுகளும்

கூவிளம்
கருவிளம்
} விளச்சீர் இரண்டோடும் "காய்" என்ற என்னும் நேரசை சேர்வதாற் மூவசைச் சீருக்குரிய

1) கூவிளங்காய்
2) கருவிளங்காய்
} என்ற 2 காய்ச்சீர் வாய்பாடுகளும் உண்டாகின்றன.

28. **காய்ச்சீர் (மூவசைச்சீர்) இதனை விளக்கும் வாய்பாடுகள் நான்கிற்கு உதாரணந் தந்து அசை பிரிக்கவும்?**

| வாய்பாடு | உதாரணம் | அசை |
|---|---|---|
| 1) தேமாங்காய் | மாதோட்டம் | மா -நேர், தோட் -நேர், டம் -நேர் |
| 2) புளிமாங்காய் | சிவலிங்கம் | சிவ -நிரை, லிங் -நேர், கம் -நேர் |
| 3) கூவிளங்காய் | பேரிளம்பெண் | பே -நேர், ரிளம் -நிரை, பெண் -நேர் |
| 4) கருவிளங்காய் | வருத்தமுடன் | வருத் -நிரை, தமு -நிரை, டன் -நேர் |

தொடரும்...

சித்தாந்தரத்தினம் செல்வி. வ. தேவராணி

சென்ற இதழின் தொடர்ச்சி.

# சைவசமயம்
# மாணவர் அறிவுப் பெட்டகம்
## (வினா விடை)

**16. சைவசித்தாந்தம் சிவம், சக்தி இரண்டையும் எவ்வாறு கூறுகிறது?**

சிவமும் சக்தியும் பின்னமிலாத, அத்துவித நிலையை

"தன்னிலமை மன்னுயிர்கள் சாரத் தரும் சக்தி பின்னமிலான் எங்கள் பிரான்" (திருவருட்பயன்)

"எத்திறம் நின்றான் ஈசன்
அத்திறம் அவளும் நிற்பாள்" (சிவஞானசித்தியார்)

"பவன் பிரம சாரியாகும்
பால் மொழி கன்னியாகும்" (சிவஞானசித்தியார்)

என்று இச் சைவசித்தாந்த நூல்கள் தாதான்மிய நிலையாகக் காட்டுகின்றன.

**17. சிவமும் சக்தியும் பிரிப்பின்றி இருக்கும் நிலையைச் சைவசித்தாந்த நூல்களில் எவ்வாறான உவமைகளால் விளக்குகின்றன?**

"பழமும், சுவையும் போல"
"பண்ணும், இசையும் போல"
"மணியும், ஒலியும் போல"
"நெருப்பும், சூடும் போல"

**18. பதியின் மூவகைத் திருமேனிகளும் எவை? அவை எவ்வாறு ஒன்பது திருமேனிகளாக (நவம்தருபேதங்களாக) அமைகின்றன?**

<table>
<tr><th>மூவகைத்திருமேனிகள்</th><th>அருவத்திருமேனி</th><th>உருவத்திருமேனி</th><th>அருவுருவத்திருமேனி</th></tr>
<tr><td rowspan="2">நவம் தருபேதங்கள்</td><td>4</td><td>4</td><td>1</td></tr>
<tr><td>சிவம்<br>சக்தி<br>நாதம்<br>விந்து</td><td>பிரம்மா<br>விஷ்ணு<br>உருத்திரன்<br>மகேஸ்வரன்</td><td>சதாசிவன்<br>(சிவலிங்கம்)<br>(ஒளி, தீ)</td></tr>
</table>

**19. இறவனின் எண் குணங்களும் எவை?**

1. தன்வயத்தனாதல்
2. தூய உடம்பினனாதல்
3. இயற்கை உணர்வினனாதல்
4. முற்றுமுணர்தல்
5. இயல்பாகவே பாசங்களினின்று நீங்குதல்
6. பேரருளுடைமை
7. வரம்பிலின்பமுடைமை
8. முடிவிலாற்றலுடைமை

20. **i) சித்தாந்தசாத்திரங்கள் பதினான்கையும் முதன் முதலில் யார் எப்போது பதிப்பித்தார்.**

**ii) இவற்றிற்கு மெய்கண்ட சாத்திரங்கள் என்ற பெயரை யார், எப்போது வழங்கினார்?**

i) மதுரை நாயகம்பிள்ளை - 1886ஆம் ஆண்டு.
ii) காஞ்சி நாகலிங்கமுனிவர் - 1897ஆம் ஆண்டு.

21. **உருவ, அருவ, அருவுருவத் திருமேனிகளின் வேறு பெயர்கள் எவை?**

உருவத்திருமேனி - சகளத்திருமேனி, வியத்தலிங்கம்
அருவத்திருமேனி - நிட்களத்திருமேனி, அவ்வியத்தலிங்கம்.
அருவுருவத்திருமேனி - சகளநிட்களத்திருமேனி, வியத்தாவியத்தலிங்கம்

22. **உருவத்திருமேனிகளின் மூன்று வகைகளும் யாவை?**

i) போகவடிவம் - கலியாணசுந்தரர் - உயிர்களுக்கு உலக இன்பங்களை வழங்கும் திருமேனி.
ii) யோகவடிவம்- தட்சணாமூர்த்தி - உயிர்களுக்கு ஞானத்தை வழங்கும் திருமேனி.
iii) வேகவடிவம் - காலசம்காரர், பைரவர், வீரபத்திரர் - இது கொடியவரைத் தண்டிக்கும் திருமேனி.

23. **சிவபெருமானின் மூர்த்திபேதங்கள் எத்தனை? அவற்றுள் மகேஸ்வர மூர்த்தங்கள் எத்தனை? அவை யாவை?**

சிவபெருமானின் மூர்த்தி பேதங்கள் - 64
மகேஸ்வர மூர்த்தங்கள் - 25

**மகேஸ்வர மூர்த்தங்கள்**

1. லிங்கோற்பவர்
2. சுகாசனமூர்த்தி
3. சக்திமூர்த்தி
4. கல்யாணசுந்தரர்
5. அர்த்தநாரீஸ்வரர்
6. சோமாஸ்கந்தர்
7. சக்கரவரதர்
8. திருமூர்த்தி
9. ஹரியத்தர்
10. தட்சணாமூர்த்தி
11. பிச்சாடனர்
12. சாபமூர்த்தி
13. நீலகண்டர்
14. திரிபாதமூர்த்தி
15. ஏகபாதமூர்த்தி
16. பைரவர்
17. இடபாருடர்
18. கங்காளர்
19. காமாரி (காமனை எரித்தவர்)
20. காலசம்காரர்
21. சலந்தாரி
22. திரிபுராரி
23. சந்திரசேகரர்
24. நடராஜர்
25. கங்காதரர்

24. **விரதமாவது யாது?**

“மனம் பொறிவழிப் போகாது நிற்றற் பொருட்டு, உணவை விடுத்தேனும் சுருக்கியேனும் மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றினாலும் கடவுளை

விதிப்படி மெய்யன்போடு விசேஷமாக வழிபடுதல் விரதமாகும்." என்று ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் சைவ வினாவிடையில் குறிப்பிட்டு உள்ளார்.

25. **விரதகாலங்களிலும், பண்டிகைக் காலங்களிலும் சைவ சமயிகள் எவ்வித செயற்பாடுகளில் ஈடுபட வேண்டும்?**

வீடு, வீட்டுச் சூழலைச் சுத்தமாக வைத்திருத்தல், வாசலில் மாவினால் கோலம் போடுதல், மாவிலை, தோரணம் கட்டுதல், கும்பம் வைத்தல், நீராடித் தோய்த்துலர்ந்த ஆடைகள் அணிதல், சுத்தமாகச் சமைத்த உணவுப்பண்டங்களை இறைவனுக்கு நைவேத்தியம் செய்தல், பஞ்சபுராணம் ஓதுதல், தானதருமம் செய்தல்.

26. **விரதங்களில் சிவவிரதங்கள், சக்திவிரதங்கள், விநாயகர்விரதங்கள், முருகவிரதங்கள் எவையெவை எனக் கூறுக?**

**சிவவிரதங்கள் :-** சோமவார விரதம், திருவாதிரை விரதம், உமாமகேஸ்வர விரதம், சிவராத்திரி விரதம், கேதாரகௌரி விரதம், கலியாண சுந்தரர் விரதம் ஆகிய எட்டுமாம். பிரதோஷ விரதமும் சிவவிரதம்ஆகும்.

**சக்திவிரதங்கள் :-** (தேவிவிரதம் எனவும் கூறப்படும்) சுக்கிர வார விரதம், ஐப்பசி உத்தர விரதம், நவராத்திரி விரதம் ஆகிய மூன்றுமாம்.

**விநாயகவிரதங்கள் :-** சுக்கிரவார விரதம், விநாயகசதுர்த்தி விரதம், விநாயகசஷ்டி விரதம் ஆகிய மூன்றுமாம்.

**முருகவிரதங்கள் :-** சுக்கிரவார விரதம், கார்த்திகை விரதம், கந்தசஷ்டி விரதம் ஆகிய மூன்றுமாம்.

27. **பண்டிகைகளாவன யாவை?**

தைப்பொங்கல், சித்திரை வருடப்பிறப்பு, தீபாவளி என்பன.

28. **வீட்டைச் சுத்தம் செய்வதால் இறைவன் அங்கு உறைவான் என்ற சிந்தனை எவ்வாறு எழுகின்றது?**

வீட்டைக் கூட்டிச் சுத்தப்படுத்தி, மஞ்சள், நீர், சாணம் என்பவற்றால் தூய்மையாக்கும் போது "தூய்மையான இடத்தில் இறைவன் உறைவான்" என்ற சிந்தனையை எமக்குத் தருகின்றது.

29. i) **நாம் உணவு உண்ணமுன் யாருக்கு நன்றி செலுத்த வேண்டும்?**
ii) **எத்தேவாரத்தை ஓதியபின் உண்ண வேண்டும்.**

i) எமக்கு உணவளித்த இறைவனுக்கு நன்றி சொல்ல வேண்டும்.
ii) திருநாவுக்கரசு சுவாமிகளின்,

"அன்னம் பாலிக்குந் தில்லைச்சிற் றம்பலம்
பொன்னம் பாலிக்கு மேலுமிப் பூமிசை
என்னம் பாலிக்கு மாறுகண் டின்புற
இன்னம் பாலிக்கு மோவிப் பிறவியே" (5.1.1)

என்ற தேவாரம் ஓதியபின் உணவு உண்ணவேண்டும்.

30. **வீட்டுடன் இணைந்து செய்யப்படும் இருவகைக் கிரியைகளை கூறி விளக்குக.**

i) பூர்வக்கிரியைகள் ii) அபரக்கிரியைகள்

i) **பூர்வக்கிரியைகள் :-** தாயின் வயிற்றில் கரு உருவாகிய காலம் தொடக்கம் இறக்கும்வரை செய்யப்படும் கிரியைகள் பூர்வக்கிரியைகளாகும்.

சீமந்தம், வளைகாப்பிடுதல், பெயர் சூட்டுதல், அன்னப்பிராசனம், காது குத்தல், ஏடு தொடக்குதல், உபநயனம் செய்தல், பூப்புனிதச்சடங்கு, திருமணச்சடங்கு போன்ற கிரியைகள் இதில் இடம்பெறும்.

ii) **அபரக்கிரியைகள் :-** உயிர், உடலைவிட்டு நீங்கியபின் செய்யப்படும் கிரியைகள் அபரக்கிரியைகளாகும்.

சூர்ணோற்சவம் - (சுண்ணமிடித்தல்),
தகனக்கிரியை - (பிரேதத்தை எரித்தல்),
அஸ்திசஞ்சயனம் (சாம்பல்அள்ளுதல்),
அந்தியேட்டி - (அந்திய + இட்டி = இறுதியாகம்),
ஏகோதிட்டம் - (ஏகம் + திட்டம் = ஒன்றைநினைத்தல்)
இறந்தவர் பொருட்டு அவரின் பிரேதத்துவநிலை நீங்கும் வண்ணம் நினைத்து அந்தணர் ஒருவரை வரவழைத்து அவருக்குத் தானம் கொடுத்தல் ஏகோதிட்டம்.
மாசிகம் - மாதந்தோறும் இறந்ததிதிகளில் செய்யப்படுவது.
சிரார்த்தம் - (சிரத்தையோடு செய்யப்படுவது)
ஆண்டுத்திதி , மாஹாளயம் என்பன அபரக்கிரியைகளாகும்.

தொடரும் ..

சைவப்புலவர், சித்தாந்தரத்தினம், திருமுறைநெறிச்செல்வர்,
தர்மாசிரியர். சாமித்தம்பி பொன்னுத்துரை B.A. (சிறப்பு)

சென்ற இதழின் தொடர்ச்சி

# அகத்தியர் தேவாரத்திரட்டு உரைவிளக்கம்
# திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்
# திருக்கடவூர் மயானம்

02ஆம் திருமுறை சிவனுருவம்
பண்:- காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

வரிய மறையார் பிறையார் மலையோர் சிலையா வணக்கி
எரிய மதில்கள் எய்தார் எறியும் முசலம் உடையார்
கரிய மிடறும் உடையார் கடவூர் மயானம் அமர்ந்தான்
பெரிய விடைமேல் வருவா ரவரெம் பெருமா னடிகளே. 1

(ப-ரை) வரிய - இசைப்பாட்டுருவமாகிய, மறையார் - வேதங்களையுடையவர், பிறையார் - திங்கட் பிறையை அணிந்தவர், மலை - மலையை, ஓர் சிலையா - ஒப்பற்ற வில்லாக, வணக்கி - வளைத்து, மதில்கள் - மும்மதில்கள், எரிய - எரிந்து போகும்படி, எய்தார் - அம்பினையெய்தவர், எறியும் - எறியப்படுகின்ற, முசலம் உடையார் - உலக்கையை உடையவர், கரிய - கருநிறம் பொருந்திய, மிடறும் உடையார் - கண்டத்தையும் உடையவர், கடவூர் மயானம் அமர்ந்தார் - திருக்கடவூர் மயானம் என்னும் தலத்தை விரும்பி எழுந்தருளினார், பெரிய - பெரிதாகிய, விடைமேல் வருவார் - இடபத்தினை ஊர்ந்து வருவார், (இனைய பெற்றியையுடைய) அவர் ஏ - அவரே, எம்பெருமான் அடிகள் - எமது பெருமானாகிய கடவுளாவார் என்றவாறு.

மங்கை மணந்த மார்பர் மழுவாள் வலனொன் றேந்திக்
கங்கை சடையிற் கரந்தார் கடவூர் மயானம் அமர்ந்தார்
செங்கண் வெள்ளே றேறிச் செல்வம் செய்யா வருவார்
அங்கை ஏறிய மறியார் அவரெம் பெருமா னடிகளே. 2

(ப-ரை) மங்கை - உமாதேவியார், மணந்த - கலந்தருளிய, மார்பர் - மார்பினையுடையவர், மழுவாள் ஒன்று - மழுவாயுதம் ஒன்றை, வலன் ஏந்தி - வலப்புறத்தில் தாங்கி, கங்கை - கங்கையை, சடையிற் கரந்தார் - சடையிற் கரக்கச் செய்தவர், கடவூர் மயானம் - கடவூர் மயானத்தை, அமர்ந்தார் - விரும்பினவர், செங்கண் - சிவந்த கண்களையுடைய, வெள் ஏறு ஏறி - வெண்ணிறமாகிய இடபத்தை யூர்ந்து, செல்வம் செய்யா - தம்மை வழிபடுவார்க்குச் செல்வத்தைச் செய்யும்படி, வருவார் - எழுந்தருளி வருவார், அங்கை ஏறிய - அழகிய கையிற் றரிக்கப்பட்ட, மறியார் - மான்கன்றினை யுடையவர், அவர் ஏ - இப்பெற்றியையுடைய அவரே, எம்பெருமானாகிய கடவுள் ஆவார் என்றவாறு.

**ஈடல் இடபம் மிசைய ஏறி மழுவொன் றேந்திக்**
**காட திடமா உடையார் கடவூர் மயானம் அமர்ந்தார்**
**பாடல் இசைகொள் கருவி படுதம் பலவும் பயில்வார்**
**ஆடல் அரவம் உடையார் அவரெம் பெருமா னடிகளே.** 3

(ப-ரை) ஈடு அல் - இணையற்ற, இடபம் - விடையர், இசைய பொருந்துமாறு, ஏறி - ஊர்ந்து, மழு ஒன்று ஏந்தி - மழுவொன்றினைத் தரித்து, காடது - புறங்காட்டினை, இடமாவுடையார் - உறைவிடமாகக் கொண்டவர், கடவூர் மயானம் அமர்ந்தார் - கடவூர் மயானத்தை விரும்பினவர், பாடல் - பாட்டினது, இசை - இசையினை, கொள் - தம்மிடத்துக் கொண்ட, கருவி - கருவிகளாகிய, படுதம் பலவும் பயில்வார் - வாத்திய விசேடங்கள் எல்லாவற்றையும் பயில்கின்றவர், ஆடல் அரவம் உடையார் - ஆடுகின்ற பாம்பினையுடையவர், அவர் ஏ - (இப் பெற்றிவாய்ந்த) அவரே, எம்பெருமான் அடிகள் - எம்பெருமானாகிய கடவுளாவர் என்றவாறு.

**இறைநின் றிலங்கு வளையாள் இளையாள் ஒருபா லுடையார்**
**மறைநின் றிலங்கு மொழியார் மலையார் மனத்தின் மிசையார்**
**கறைநின் றிலங்கு பொழில்சூழ் கடவூர் மயானம் அமர்ந்தார்**
**பிறைநின் றிலங்கு சடையார் அவரெம் பெருமா னடிகளே.** 4

(ப-ரை) இறைநின்று இலங்கு - கையிறையில் நிலை பெற்று விளங்குகின்ற, வளையாள் - வளையினையுடையவராகிய, இளையாள் - இளமை தங்கிய உமாதேவியாரை, ஒருபால் உடையார் - ஒருபக்கத்து உடையவர், மறை நின்று இலங்கு - வேதங்கள் நின்று விளங்குகின்ற, மொழியார் - திருச்சொல்லை உடையவர், மலையார் - மயக்க வறிவில்லாதவரது, மனத்தின் மிசையார் - மனத்தின் மீது எழுந்தருளியவர், கறை நின்று இலங்கு - கருநிறம் பொருந்தி விளங்குகின்ற, பொழில்சூழ் - சோலைகள் சூழ்ந்த, கடவூர் மயானம் அமர்ந்தார் - கடவூர் மயானத்தை விரும்பினவர், பிறை நின்று இலங்கு - பிறைச்சந்திரன் தங்கி விளங்கும், சடையார் - சடையினை யுடையவர், அவர் ஏ - அவரே, எம்பெருமான் அடிகள் - எம்பெருமானாகிய கடவுளாவர் என்றவாறு.

**வெள்ளை எருத்தின் மிசையார் விரிதோ டொருகா திலங்கத்**
**துள்ளும் இளமான் மறியார் சுடர்பொற் சடைகள் துலங்கக்**
**கள்ள நகுவெண் தலையார் கடவூர் மயானம் அமர்ந்தார்**
**பிள்ளை மதியம் உடையார் அவரெம் பெருமா னடிகளே.** 5

(ப-ரை) வெள்ளை எருத்தின் மிசையார் - வெண்ணிறமாகிய இடபத்தின்மேல் எழுந்தருளுபவர், விரிதோடு - ஒளியைப் பெருக்குகின்ற தோட்டினையணிந்த, ஒருகாது இலங்க - இடக்காதின் பாங்கர்த்தங்குமாறு, துள்ளும் இளமான் மறியார் - துள்ளிக் குதிக்கின்ற இளமைதங்கிய மான்கன்றினையுடையார், சுடர் பொற்சடைகள் துலங்க - சுடருகின்ற பொன்னிறமாயசடைகள் விளங்க, (அவற்றின்மீது) கள்ளம் நகுவெள்

தலையார் - கள்ளத்தன்மை வாய்ந்த நகுவெண் தலையையுடையவர், கடவூர் மயானம் அமர்ந்தார் - கடவூர் மயானத்தை விரும்பினவர், பிள்ளை மதியம் உடையார் - (சடையில்) இளம்பிறையை உடையவர், அவர் ஏ - அவரே, எம்பெருமான் அடிகள் - அம்பெருமானாகிய கடவுளாவர் என்றவாறு.

**பொன்றா துதிரு மணங்கொள் புனைபூங் கொன்றை புனைந்தார்**
**ஒன்றா வெள்ளே றுயர்த்த துடையா ரதுவே ஊர்வார்**
**கன்றா வினஞ்சூழ் புறவிற் கடவூர் மயானம் அமர்ந்தார்**
**பின்தாழ் சடையார் ஒருவர் அவரெம் பெருமா னடிகளே.** 6

(ப-ரை) பொன்தாது - பொன்னிறமாகிய மகரந்தம், உதிரும் - சிந்துகின்ற, மணம்கொள் - வாசனையைக் கொண்ட, புனை - அலங்கரிக்கப்பட்ட, பூங்கொன்றை - பொலிவுடைய கொன்றை மலர் மாலையை, புனைந்தார் - அணிந்தவர், உயர்ந்து - கொடியாக உயர்த்தியதாகிய, ஒன்றா - நிகரில்லாத, வெள்ளேறு - வெள்ளிய இடபத்தை, உடையார் - உடையவர், அதுவே ஊர்வார் - அதனையே ஊர்தியாகவும் ஊர்ந்தருளுவர், கன்றா இனம் சூழ்புறவில் - கன்றுகளையுடைய பசுக்கூட்டங்கள் சூழ்ந்த முல்லைநிலத்தில் உள்ள, கடவூர் மயானம் அமர்ந்தார் - கடவூர் மயானத்தை விரும்பினவர், பின் தாழ்சடையார் - பின்னே தொங்குகின்ற சடையையுடையவராகிய, ஒருவர் - ஒப்பற்றவர், அவர் ஏ - அவரே, எம்பெருமானடிகள் - எம்பெருமானாகிய கடவுளாவர் என்றவாறு.

**பாச மான களைவார் பரிவார்க் கமுதம் அனையார்**
**ஆசை தீரக் கொடுப்பார் அலங்கல் விடைமேல் வருவார்**
**காசை மலர்போல் மிடற்றார் கடவூர் மயானம் அமர்ந்தார்**
**பேச வருவார் ஒருவர் அவரெம் பெருமா னடிகளே.** 7

(ப-ரை) பாசமான - (அடியவரது) வினைப்பாசங்களை, களைவார் - பறித்தருள்பவர், பரிவார்க்கு - அன்பு செய்பவர்க்கு, அமுத மனையார் - அமிர்தத்தை ஒத்தவர், ஆசைதீரக் கொடுப்பார் - தம்மை வழிபடுவோரது ஆசையடக்கும்படி ஈந்தருளுபவர், அலங்கல்விடைமேல் வருவார் - அசையும் தன்மைத்தாகிய இடபத்தின்மேல் எழுந்தருள்பவமர், காசை மலர்போல் - காயாம் பூவினைப் போன்ற, மிடற்றார் - கரிய கண்டத்தை உடையவர், கடவூர் மயானம் அமர்ந்தார் - கடவூர் மயானத்தை விரும்பினவர், பேச வருவார் ஒருவர் - யாவரும் புகழுமாறு வருவாராகிய ஒப்பற்றவர், அவர் ஏ - அவரே, எம்பெருமான் அடிகள் - எம்பெருமானாகிய கடவுளாவர் என்றவாறு.

**செற்ற அரக்கன் அலறத் திகழ்சே வடிமெல் விரலால்**
**கற்குன் றடர்த்த பெருமான் கடவூர் மயானம் அமர்ந்தார்**
**மற்றொன் றிணையில் வலிய மாசில் வெள்ளி மலைபோற்**
**பெற்றொன் றேறி வருவார் அவரெம் பெருமா னடிகளே.** 8

(ப-ரை) செற்ற அரக்கன் - சினங்கொண்ட அரக்கனாகிய இராவணன், அலற - அலறியழும்படி, திகழ் சேவடி - விளங்குகின்ற திருவடியின், மெல்விரலால் - மெல்லிய திருவிரலால், கல் குன்று - கற்களையுடைய கயிலாயமலையின் கீழ், அடர்த்த - நெருக்கி வருத்திய, பெருமான் - தலைவர், மற்றொன்று - வேறொன்று, இணைஇல் - நிகரில்லாத, வலிய - வலியதாகிய, மாசு இல் - குற்ற மற்ற, வெள்ளிமலை போல் - வெள்ளிமலையைப் போன்ற, பெற்றம் ஒன்று - எருது ஒன்றின் மீது, ஏறி வருவார் - இவர்ந்து வருவார், அவர் ஏ - அவரே, எம்பெருமான் அடிகள் - எம்பெருமானாகிய கடவுளாவார் என்றவாறு.

**வருமா கரியின் உரியார் வளர்புன் சடையார் விடையார்**
**கருமான் உரிதோல் உடையார் கடவூர் மயானம் அமர்ந்தார்**
**திருமா லொடுநான் முகனும் தேர்ந்தும் காணமுன் ஒண்ணாப்**
**பெருமான் எனவும் வருவார் அவரெம் பெருமா னடிகளே.** 9

(ப-ரை) வரும் - எதிர்த்து வந்த, மா - பெரிய, கரியின் உரியார் - யானைத் தோலை யுடையார், வளர்புன் சடையார் - வளர்த்த புல்லிய சடையையுடையவர், விடையார் - இடபத்தை யுடையவர், கருமான் உரிதோல் உடையார் - கருமானினது உரிக்கப்பட்ட தோலையுடையவர், கடவூர் மயானம் அமர்ந்தார் - கடவூர் மயானத்தை விரும்பினவர், திருமாலொடு நான்முகனும் - விட்டுணு மூர்த்தியோடு நான்முகனும், முன் - முன்பு, தேர்ந்தும் - தேடியும், காணஒண்ணா - காணமுடியாத, பெருமான் எனவும் வருவார் - இறைவன் என்று சொல்லவும் படுவர், அவர் ஏ - அவரே, எம்பெருமான் அடிகள் - எம்பெருமானாகிய கடவுளாவார் என்றவாறு.

**தூய விடைமேல் வருவார் துன்னா ருடைய மதில்கள்**
**காய வேவச் செற்றார் கடவூர் மயானம் அமர்ந்தார்**
**தீய கருமம் சொல்லும் சிறுபுன் தேரர் அமணர்**
**பேய்பே யென்ன வருவார் அவரெம் பெருமா னடிகளே.** 10

(ப-ரை) தூய - புனிதமாகிய, விடைமேல் வருவார் - இடபத்தின்மீது ஊர்ந்து வருபவர், துன்னாருடைய மதில்கள் - பகைவருடைய திரிபுரங்கள், காயவேவ செற்றார் - எரிந்தொழியக் கோபித்தவர், தீய கருமம் சொல்லும் - தீய காரியங்களை நல்லனவாகச் சொல்லுகின்ற, சிறுபுன் தேரர் அமணர் - அற்பத் தன்மை வாய்ந்த புல்லிய புத்தரும் சமணரும், பேய் பேய் என்ன வருவார் - பேய் பேய் என்று இகழும்படி எழுந்தருள்வார், அவர் ஏ - அவரே, எம்பெருமான் அடிகள் - எம்பெருமானாகிய கடவுளாவார் என்றவாறு.

**மரவம் பொழில்சூழ் கடவூர் மன்னும் மயானம் அமர்ந்த**
**அரவம் அசைத்த பெருமான் அகல மறிய லாகப்**
**பரவும் முறையே பயிலும் பந்தன் செஞ்சொல் மாலை**
**இரவும் பகலும் பரவி நினைவார் வினைகள் இலரே.** 11

(ப-ரை) மரவம் பொழில் சூழ் - குங்கும மரச்சோலை சூழ்ந்த, கடவூர் - திருக்கடவூரில், மன்னும் - நிலைபெற்ற, மயானம் அமர்ந்த - திருமயானத்தில் எழுந்தருளிய, அரவம் அசைத்த பெருமான் - பாம்பைக் கச்சையாகக் கட்டிய இறைவனது, அகலம் - வியாபகத்தன்மை, அறியலாக - அறியப்படுமாறு, பரவும் முறையே பயிலும் - வழிபாடு செய்யும் முறைமையாகவே ஏத்துகின்ற, பந்தன் - திருஞானசம்பந்தனது, செஞ் சொன்மாலை - செவ்விய சொன் மாலையாகிய பதிகத்தை, இரவும் பகலும் - அல்லும் பகலும், பரவி நினைவார் - நினைந்து துதிப்பவர், வினைகள் இலர் - வினைகளில்லாதவராவர் என்றவாறு.

திருச்சிற்றம்பலம்

உரைக்குறிப்பு : கயப்பாக்கம் சதாசிவச் செட்டியார்.
உதவியவர் : வ. பேரின்பநாயகம்.

18ஆம் பக்க தொடர்ச்சி..

மறுமை நலனையும் பெறவேண்டும். தானும் உண்ணாது பிறர்க்கும் கொடாது பொருளை வைத்துக் காப்பாற்றியவன், முடிவில் வீணே இறந்து இகபர நலன்களை இழந்து விடுகின்றனன். உயிர் பிரிகின்ற தறுவாயில் நம்முடன் மறு பிறப்பிலும் வந்து துணை செய்வது எது? நாம் புரிந்த அறமே அல்லவா? “துகள்தீர் பெருஞ்செல்வம் தோன்றியக்கால் தொட்டுப் பகடு நடந்தகூழ் பல்லாரோ டுண்க” என்ற நாலடியாரின் வாக்கையும் உணர்க. அங்ஙனம் விருந்தோம்புங்கால் இனிய மொழிகளும் குளிர்ந்த முகமும் உடையவராயிருத்தல் வேண்டும். மோந்தால் வாடுந் தன்மையுடையது அனிச்ச மலர்; சிறிது முகம் சுழித்துப் பார்த்தால் விருந்தினர் முகம் வாடும். அவ்வளவு மென்மையுடையது விருந்து.

ஆதலால், இல்வாழ்வோர் மலர்ந்த முகத்தோடும், இனிய மொழிகளுடனும் விருந்தோம்பி இகபர சௌபாக்கியங்களை எய்துவராக!.

தெய்வத்திரு திருமுருக
கிருபானந்த வாரியார் சுவாமிகள்

# சைவசமய விழுமியங்கள்

சைவத்தையும், சமய உண்மைகளையும், ஒழுக்கசீலங்களையும் அறிந்து உணர்ந்து ஒழுகுதல் சைவசமய விழுமியங்களாகும்

சைவம் என்பது சிவனோடு சம்பந்தமுடையது. உயிர்கள் சைவவிழுமியங்களைக் கடைப்பிடித்து, ஐம்மல ஆதிக்கத்தை வலியடக்கி, இரு வினைஒப்பநோக்கி, சத்தினிபாதம் கைவரப்பெற்று சிவனோடு இரண்டறக்கலக்கும் அத்துவிதநிலையில், திருவடிப்பேறாகிய பரமுத்தியைப் பெறுகின்றன. பிறப்பறுக்கின்ற இம்முத்தியைச் சிவானந்தமயமான சாயுச்சிய முத்தி என்று கூறுகிறது திருமந்திரம்.

"சைவம் சிவனுடன் சம்பந்தமாவது
சைவம் தனை அறிந்தே சிவம்சாருதல்
சைவம் சிவம் தன்னைச் சாராமல்நீங்குதல்
**சைவம் சிவானந்தம்** சாயுச்சியமே". (திருமந்திரம்)

சமயம் என்பது நெறி. இறைவனைச் சேரும்வழி முறையை விளக்குவது. தத்துவ ரீதியாக கோட்பாடு முறையில் நன்னெறி காட்டுவது சமயம். உண்மையை, தர்மத்தை, சத்தியத்தை, அன்பை, அகிம்சையை, இறை இயல்புகளை எடுத்துக் காட்டுவது சமயம்.

விழுமியங்கள் என்பது வாழ்வியலில் நற்குண, நற்செய்கைகளைக் கடைப்பிடித்து, ஒழுக்க சீலர்களாக, பண்பாடு மிக்கவர்களாக, சமயம் கூறும் கோட்பாடுகளைப் பின்பற்றுபவர்களாக வாழும் வழிகளைஎடுத்துக் கூறுவது. மனிதன் எப்படியும் வாழலாம் என்ற முரட்டுப் பிடிவாதத்தையும், வரட்டுக் கௌரவத்தையும் தூக்கி எறிந்து இப்படித்தான் வாழவேண்டும் என்ற உறுதிப்பாட்டுடன் வாழ்வதுதான் விழுமியங்கள். "அட்டாங்க யோகத்தில் கூறப்படும் இயமமாகிய அல்லனவற்றை விலக்கி, நியமமாகிய நல்லனவற்றைச் செய்வதே விழுமியங்கள்" என்று சுருக்கமாகச் சொல்லலாம்.

சைவசமய விழுமியங்கள் என்பதை, சைவசமயம் காட்டும் வாழ்க்கை முறை என்ற வரையறைக்குள் உள்வாங்கிக் கொள்ளலாம். சைவசமயம் காட்டும் வாழ்க்கை முறை பரந்தது; விரிந்தது; ஆழமானது; நுண்மையானது. ஆலயவழிபாடு, குருலிங்கசங்கம வழிபாடு, நிட்காமியவழிபாடு, பற்றற்று, தன்முனைப்பற்று, தற்போதமற்றுச் செய்யும் திருத்தொண்டு, பெரியோரைக் கனம்பண்ணுதல், விருந்தோம்புதல், என்பன சைவசமய விழுமியம் காட்டும் நற்பண்புகள். சைவ ஆகமங்கள், சைவத்திருமுறைகள், மெய்கண்ட சாத்திரங்கள், பத்ததிகள் விரித்துக் கூறும் சைவசமய விழுமியங்களைப் பின்பற்றுபவர்களையே சைவசமயத்தவர்களாகக் கொள்ளமுடியும். அவற்றில் பின்வரும் சிலவற்றைச் சற்று விபரமாகக் குறிப்பிடுதல் சாலப்பொருந்தும்.

1.) சமயதீட்சை
2.) சிவ சின்னங்கள்
3.) திருவைந்தெழுத்து
4.) சைவ நாற்பாதங்கள்
5.) சிவ விரதங்கள்
6.) குருலிங்கசங்கமவழிபாடு

1.) **சமயதீட்சை :** ஒருவர் தான் சைவசமயத்தவர் என்பதை நிர்ணயிப்பது சிவதீட்சை பெறுவதன் மூலமாக மட்டுமே. சமயதீட்சை பெறாதவர் எவரும் சைவசமயிகளல்லர் என்று சாத்திரநூல்கள் தெளிவாகக் கூறியிருக்கின்றன.

"இறைவன் குருவினிடமாக நின்று உயிர்களுக்கு ஞானத்தைக் கொடுத்துப் பாசத்தைக் கெடுக்கும் கிரியையே தீட்சையாகும். அது இருவகைப்படும் 1.) சாதாரதீட்சை 2.) நிராதாரதீட்சை

1) **சாதாரதீட்சை (ச+ஆதார)** : இது பரமசிவன் ஞானாசிரியரை அதிட்டித்து நின்று சகலருக்கு அளிக்கும் தீட்சையாகும். அதாவது குருவை ஆதாரமாகக் கொண்டு செய்யப்படுவது. இதில் நான்கு வகை உண்டு. அவை

(i) சமயதீட்சை (ii) விசேடதீட்சை
(iii) நிர்வாணதீட்சை (iv) ஆசாரிய அபிடேகம்

2) **நிராதாரதீட்சை (நிர்+ஆதாரம்)** : பரமசிவன் விஞ்ஞானகலருக்கும், பிரளயாகலருக்கும் தானே குருவாய் நின்று வேறு ஆதாரத்தை வேண்டாது முத்தியளிக்கும் தீட்சை முறையாகும்.

(i) **சமயதீட்சை** : சமயதீட்சை பெற்றவர்கள் ஆலயவழிபாட்டிற்கும் தொண்டுசெய்வதற்கும் உரித்துடையவர்கள். திருவைந்தெழுத்தை ஓதவும் இவர்களுக்கு அனுமதி உண்டு. சமயதீட்சையில் ஏழுநிலைகள் உள்ளன. அவை

1.) நயனதீட்சை 2.) பரிசதீட்சை
3.) மானசதீட்சை 4.) சாத்திரதீட்சை
5.) வாசக(மந்திர)தீட்சை 6.) யோகதீட்சை
7.) ஔத்திரிதீட்சை (ஓமம்வளர்த்துச் செய்வது) இது இருவகைப்படும்

I.) ஞானாவதி - குண்டமண்டலத்தை அகத்தில் வைத்துச் செய்வது.
II.) கிரியாவதி - குண்டமண்டலத்தைப் புறத்தில்வைத்துச் செய்வது.

(ii) **விசேடதீட்சை :** சமயதீட்சை பெற்று நாள்தோறும் அனுட்டானம் முறையாகச் செய்பவர்களுக்குச் செய்யப்படுவது விசேடதீட்சையாகும். இவர்கள் சிவபூசை செய்ய அருகதை உடையவர்கள்.

(iii) **நிர்வாணதீட்சை :** பந்தபாசம் அனைத்தும் நீக்கிச் சிவபெருமான் திருவடியை அடையச் செய்யும் தீட்சையே நிர்வாணதீட்சையாகும். இவர்கள் நிர்வாணதீட்சை பெற்றுக்கொண்டதன் மூலம் இறைவன் திருவடியை அடைய அருகதையுடையவர்களாகின்றனர்.

(iv) **ஆசாரிய அபிடேகம் :** நிர்வாணதீட்சதர் குருவாவதற்கு அதிகாரம் பெறும் பொருட்டுச் செய்துகொள்ளும் கிரியையே ஆசாரிய அபிடேகம் ஆகும்.

2.) **சிவசின்னங்கள்** : சைவசமய விழுமியங்களில் இன்றியமையாத சிவசின்னங்களாகப் போற்றப்படுவனவற்றில் முக்கியமானவை இரண்டு ஆகும். அவை : அ. திருநீறு ஆ. உருத்திராக்கம்

அ. **திருநீறு** : குற்றமற்ற பசுவின் சாணத்தை நெருப்பினால் தகித்தலால் உண்டாவது திருநீறு. இது தூய வெண்ணிறமானதாக இருத்தல் வேண்டும். வெண்மை தூய்மையின் அடையாளம்; இதை அணிவதால் எமது அகமும், புறமும் தூய்மை அடைகின்றன. செந்நிறத் திருநீறு, புகைநிறத் திருநீறு, பொன்நிறத் திருநீறு அணிய உகந்தவை அல்ல. திருநீறணியும் முறைகள் இரண்டாகும்.

1. உத்தூளனம் : திருநீற்றை நெற்றியில் பரவிப் பூசுதல்.
2. திரிபுண்டரம் : திருநீற்றை நீரில் குழைத்து மூன்று குறிகளாகத் தரித்தல். சமயதீட்சை பெற்றவர்களே இவ்வாறு தரிக்கத்தக்கவர்கள்.

திருநீற்றை கிழக்குமுகமாகவேனும், வடக்கு முகமாகவேனும் இருந்துகொண்டு தரிக்கவேண்டும். திருநீற்றை நிலத்தில் சிந்தாவண்ணம் நடுமூன்று விரல்களாலும் நெற்றி, மார்பு உட்பட 16 இடங்களில் சிவனை நினைத்து "சிவசிவ" என்று சொல்லித் தரித்தல் வேண்டும். திருநீற்றைக் குறிக்கும் வேறு பெயர்கள் ஐந்து உள்ளன.

1. விபூதி - மேலான செல்வத்தைத் தருவது.
2. பசிதம் - ஒளியைக் கொடுப்பது.
3. பசுமம் - பாவங்களை சுட்டெரித்து நீறாக்குவது.
4. இரட்சை- தரித்தவர்களை இரட்சிப்பது (காப்பாற்றுவது)
5. சாரம் - உயிர்களின் மலத்தை நீக்குவது.

ஆ. **உருத்திராக்கம்** : உருத்திராக்கம் (உருத்திரன்+அக்கம்) என்பது உருத்திரனின் (சிவனின்) கண் என்று பொருள்படும். திரிபுராந்தசுரர்களால் தமக்கு ஏற்பட்ட துன்பங்களைத் தேவர்கள் சிவபிரானிடம் கூறியபோது அவரின் மூன்று கண்களினின்றும் சிந்திய கண்ணீர் மணிகளே உருத்திராக்கம் ஆகும். சிவனை நினைந்து சைவசமய விழுமியங்களை மேற்கொள்பவர்கள் உருத்திராக்கம் அணிந்து அதைச் சிவசின்னமாகப் போற்றுவார்கள். அது அவர்களை இரட்சிக்கும்; சிவசிந்தனையைத் தூண்டும்; தன்முனைப்பை அறுக்கும். உருத்திராக்கத்தில் ஒருமுகம் தொடக்கம் பதினாறு முகங்கள் வரையிலான மணிகள் உள்ளன. கண்டி, அக்கு, கண்மணி, சிவமணி, தாழ்வடம், திருஅடையாளம் என்பன உருத்திராக்கத்தின் மறு பெயர்களாகும்.

தொடரும்...

சைவப்புலவர், திருநெறிச்செல்வர், சித்தாந்தரத்தினம், தர்மாசிரியர்.
சாமித்தம்பி பொன்னுத்துரை பீ.ஏ.(சிறப்பு)

சென்ற இதழின் தொடர்ச்சி

உ

திருச்சிற்றம்பலம்

# காலத்தால் மிக முந்திய சித்தாந்த சாத்திரம்

வாகீசமுனிவரின் ஞானாமிர்தம்

இந்நிலையில் களப்பிரர் என்னும் ஒருவகைக் கூட்டத்தார் தமிழகத்தில் புகுந்து தமிழ் வாழ்வைச் சீரழித்தனர். தமிழிசையும் தமிழ் நாடகமும் ஒளி குன்றின. தமிழ் இலக்கியங்கள் பல இறந்தொழிந்தன. தமிழ்ச் சைவநெறி தலைதடுமாறிற்று. பின்னர்த்தமிழகத்தின் வடபகுதியான தொண்டைநாட்டில் பல்லவருடைய ஆட்சி நிலைபெற்று நடக்கத் தொடங்கிற்று. அவர்கள் தமிழ் நாட்டவரல்லர்; அதனால் அவர்கள் காலத்தில் வடமொழியே மிக்க செல்வாக்குப் பெற்றது. வடமொழி பயிற்றும் கல்லூரிகள் பல காஞ்சிமா நகரத்திலும்[1] பிறவிடங்களிலும் உண்டாயின. பல்லவ வேந்தர் பலர் வடமொழி வாணர்களுக்கு மிக்க சிறப்புச்செய்து ஆதரித்தனர். முதல் மகேந்திரவன்மன் முதலியோர் வடமொழியில் நாடகங்கள் எழுதினர். இவ்வகையில் தமிழகத்தில் தமிழ் மொழியின் இடத்தே வடமொழி தங்கிச் சமயத்துறையிலும் ஆட்சி வகையிலும் சிறந்து விளங்கிற்று. நாட்டு மக்களுடைய தாய்மொழியில் சமயவுணர்வு நல்கும் நூல்கள் அருகினபடியால், அவர்களுடைய பொதுவாழ்வில் சமயவுணர்வும் ஒழுக்கமும் குன்றின.

இதற்கிடையே பௌத்த துறவிகளும் சயினசமயத் துறவிகளும் ஆங்காங்கே மடங்களும் பள்ளிகளும் அமைத்து மக்களிடையே தங்கள் சமயக் கருத்துக்களைப் பரப்பினர். சயினப் பள்ளிகளினும் பௌத்தப் பள்ளிகள் பல்லவர் காலத்தில் தொடக்கநிலையில் பெருகியிருந்தன. நூற்றுக்கு மேற்பட்ட பௌத்தப் பள்ளிகளையும், பத்தாயிரவர்க்குக் குறையாத பௌத்தத் துறவிகளையும் இப்பகுதியில் காணலாம் என **ஹியூன்சாங்** குறிக்கின்றார்.[2] பின்னர், பௌத்த மடங்களில் பெரும்பொருள் சேர்ந்தது; அதன் இயற்கை விளைவாக அம்மடங்களின் செயல் முறைகளில் பொய்யும் வழுவும் புகுந்தன. வேற்றுச் சமயங்களும் படிப்படியாக வளர்ச்சி பெற்றன; மக்களுடைய ஆதரவு குன்றிற்று. இதன் பயனாகப் பௌத்தசமயம் தமிழகத்திலிருந்து மறைவதாயிற்று. ஆயினும் அதனிடத்தே சயினசமயம் வளர்ந்து அரசர் பலரைத் தன்பால் ஈர்த்துக்கொண்டது. பல்லவ வேந்தனான **மகேந்திர வன்மனும்**, பாண்டிய மன்னனான **நெடுமாறனும்** சயினசமயத்தை மேற்கொண்டனர். "அரசன் எவ்வழி அவ்வழி குடிகள்" என்றமொழிப்படி நாட்டில் மக்கள் பலர் சயினர்களாயினர். சயின சமயத்தை மக்கட்கு எடுத்துரைக்கும் சயினச் சான்றோர் சமணர்களாதலின், சயின சமயமும் **சமண சமயம்** என்றே தமிழகத்தில் வழங்கப்பட்டது.

பௌத்த சமண சமயங்களின் வளர்ச்சியால் செயற்சிறப்புக் குன்றியிருந்த வைதிக சமயம், பொதுமக்கள் வழங்கும் தமிழ்மொழியில் தனது சமயப்பணியைச் செய்யாது சிவ வழிபாட்டையும் சிவாலய வழிபாட்டையும் வற்புறுத்தி ஒழுகிய

[1] .Annual Report Madras Epigraphy 1930-31. P.43 [2] Pallava Architecture P. III P. 9

சிவாகமமாகிய சித்தாந்த நெறியோடும் இகலிப் பூசலிடத் தலைப்பட்டது. சிவாகமங்களை ஞானநெறிக்குப் பிரமாணமாகக் கொள்ள மறுத்துத்தன் வாழ்வுக்குக் கேடு செய்துகொண்டது. ஆகம வழி நின்ற அறிஞர்கள் அக்கால நிலையை நன்கு உணர்ந்தனர். அவர்கள் ஆங்காங்கு ஞானநிலையங்களாகத் திருமடங்கள் நிறுவி அவற்றின் வாயிலாக நாட்டு மக்கட்கு நற்பணி புரியலுற்றனர். இம்மடங்கள், அறிவு வேண்டுவோர்க்குக் கல்வியும், நோயுற்றோர்க்கு மருத்துவமும், பசித்துவந்தோர்க்கு உணவும் நல்கிப் பணிபுரிந்து வந்தன.

கடவுட்கொள்கையும் வினையுணர்வும் மறுபிறப்பும் சமய வாழ்வின் உயிர்நாடியாக இருந்தன. பௌத்த சமண சமய நூல்கள் கடவுட்கொள்கையை மிகுதியும் வற்புறுத்தாது வினையுணர்வையும் மறுபிறப்பையும் பெரிதெடுத்துப் பேசின. கடவுள் வழிபாட்டை நன்கு வற்புறுத்தாமல், பொய், கொலை, களவு, கள், காமம் என்ற இவற்றைக் கடிவதாகிய நல்லறமொன்றையே சமயப் பேருணர்வும் பேரொழுக்கமுமாகப் பேணியுரைத்தன. அவரவர் செய்யும் வினைப் பயன்களை அவரவரும் நுகர்ந்து கழிக்கவேண்டுமேயன்றி, வினைத் தொடக்கினின்று உயிர்களை விடுவிக்கும் ஆற்றல் இறைப்பொருட்கும் இல்லையென ஏதுக்களாலும் எடுத்த மொழிகளாலும் வற்புறுத்துவதிலேயே சமயச் சொற்போர்கள் வழங்கி வந்தன.

இந்நிலையில் கி.பி. ஏழாம் நூற்றாண்டில் திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் முதலியோர் தோன்றினர். அவர்கள் காலத்தே ஆகம வழிவந்த சிவநெறி நாடெங்கும் பரவியிருந்தது; ஆங்காங்கே சிவன்கோயில்களும் இருந்து வந்தன; கோயில்களில் நாள்வழிபாடும் ஆண்டுவிழாக்களும் நடைபெற்று வந்தன. என்றாலும் மேலே காட்டிய காரணங்களால் மக்களிடையே கடவுட்கொள்கையில் அழுந்திய உள்ளமும், கடவுள் வழிபாட்டால் வினையினின்றும் வீடுபெறலாம் என்ற நம்பிக்கையும் குன்றியிருந்தன. இவற்றை வற்புறுத்தியுரைக்கும் நல்லாசிரியன்மார்களின் வருகையை அக்காலம் எதிர்நோக்கியிருந்தது. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் முதலியோர் தோன்றி, நாடுமுழுவதும் சுற்றி, சிவன்கோயில் இருக்கும் ஊர்தொறும் சென்று நாட்டுக்கு உரிய சிவநெறிக்கருத்துக்களை மக்கட்கு அறிவுறுத்துவாராயினர்.

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், நம்பியாரூரர் ஆகிய மூவர் வரலாறுகளையும் நோக்கின், ஞானசம்பந்தர் தமிழகத்தின் தெற்கிலும், நாவரசர் வடக்கிலும், நம்பியாரூரர் மேற்கிலும் சுற்றிச் சமயத் தொண்டு சிறப்புறச் செய்திருப்பது புலனாகிறது. அவர்கள் காலத்தில், தமிழகத்தில், காளாமுகம், பாசுபதம், மாவிரதம் முதலிய அகச் சமயங்கள் இருந்திருக்கின்றன. ஆயினும், அச் சமயத்தவர்கள் ஆங்காங்கு இருந்துகொண்டு தங்கள் சமயக் கொள்கைகளைச்சிற்சிலருக்கு அறிவுறுத்தி வந்தனரேயன்றி இப்பெருமக்களைப் போல நாடுமுழுவதும் பரந்துசென்று பணிபுரியவில்லை. அவர்களில் காளாமுக சைவத்தைச் சேர்ந்தவர்கள் தமிழகத்தில் இருந்திருக்கின்றனர் என்பதைக் கீழைச்சளுக்கவேந்தர் கல்வெட்டுக்களேயன்றி, கும்பகோணத்துக்கு அண்மையிலுள்ள தாராசுரத்துக் கல்வெட்டும்[1], கொடும்பாளூர்க் கல்வெட்டும்[2], கோயில்தேவராயன்

[1]. A.R. for 1907-8 para 66 and A.R. for 1915 para 11. [2]. A.R. No. 140 of 1907

பேட்டையிலுள்ள கல்வெட்டும்[3], குறிக்கின்றன. இவ்வாறே காபால சமயத்தவரும்[4] பாசுபதரும்[5] மாவிரதரும்[6] இருந்தனர் என்பதை அரசியற்கல்வெட்டறிக்கைகள் எடுத்துரைப்பதனால் அறியலாம்.

இங்ஙனம் பலவேறு சமயத்தவர் இருப்பினும், இவர்களது சமயக் கருத்துகளை விரித்தோதும் நூல்களுள் ஒன்றேனும் தமிழில் கிடைக்காமையால் இவர்கள் தமது **சமயவுணர்வு பெருகுவதற்கு மேற்கொண்டிருந்த மொழி தமிழன்று** என்பதும் தெரிகிறது. இச்சமயங்களின் இடையே திருஞானசம்பந்தர் முதலியோர் ஆகம வழிவந்த சைவநெறியை இனிய வழிபாட்டுத் திருப்பாட்டுக்களாக **இசைத்தமிழில்** பாடி மக்கட்குச் சமயவுணர்வு கொளுத்துவாராயினர். அவர் பாடிய திருப்பாட்டுக்கள் பலவும் இன்று சைவத்திருமுறைகளாக நின்று பயன்செய்து வருகின்றன.

இப்பெருமக்கள் காலத்துக்குப்பின், சைவநெறியில் புது மலர்ச்சியுண்டாயிற்று. நாட்டுமக்கள் அறிந்த மொழியாகிய தமிழில் பல்லாயிரக்கணக்கான திருப்பாட்டுக்கள் தோன்றி சமயவுணர்வும் ஒழுக்கமும் பெறுவித்தன. அனைவரும் பேரார்வத்தோடு பேணிப்பயின்று பயன் பெறுவாராயினர். அவர்கள் காலத்தேயே பல்லவரும் பாண்டியரும் வேற்றுச் சமயத்தைக் கைவிட்டுத் **தமிழகத்துக்கேயுரிய சைவத்தை** மேற்கொண்டனர். தமிழகத்தில் சிவன்கோயில்கள் கல்லாலும் பிறவற்றாலும் எடுக்கப் பெற்றன. வானளாவவுயர்ந்த கோபுரங்களும் விமானங்களும் பெருக உண்டாயின.

சைவநெறிக்கண் தோன்றிய புதுமலர்ச்சியால் வேந்தர்களும் பொதுமக்களும் சிவவழிபாட்டிலும் சிவன்கோயில் திருப்பணியிலும் பேரீடுபாடு கொண்டனர். திருக்கோயில் அமைப்பும், வழிபாட்டு முறையும் தெளித்துரைக்கும் ஆகமப்பயிற்சியில் மடகட்கு நாட்ட முண்டாயிற்று. சிவாகமங்களை விரும்பிப்பேணிய சிறப்பால் பல்லவ வேந்தன் ஒருவன் **ஆகமானுசாரி** என்று சிறப்புப் பெயரும் பெற்றுள்ளான். இச் சிவாகமங்களைப் போற்றியுரைக்கும் சான்றோர் **சிவாசாரிய**ரென்றும் **சைவாசிரியர்** என்றும் கூறப்படுவர். இச் சைவாசிரியன்மார் ஆங்காங்கே தனித்தனி இடம் அமைத்துக் கொண்டு சைவாகமக் கருத்துக்களையும் ஒழுக்கங்களையும் மக்கட்கு அறிவுறுத்தி வந்தனர். அவ்விடங்கட்கு **மடம்** என்றும் **குகை**யென்றும் பெயர்கள் வழங்கின. இவைகள் சிறப்பு வகையில் சமய அறிவும் சமயவொழுக்கங்களும் கற்பித்தனவாயினும் பொதுவகையில் மக்களது பசிப்பிணிக்கு உணவும், உடற்பிணிக்கு மருந்தும் உதவின. இவ்வாற்றால், இம் மடங்கட்கு மக்களது நல்லாதரவு பெருகியிருந்தது. வேந்தர்களும் மிக்க பொருளும் நிலங்களும் தந்து இம்மடங்களை நன்கு பேணினர். இச்சைவாசிரியர்களைத் தங்கட்கு அருட்குருவாகவும் அரசகுருவாகவும் கொண்டு பரவினர். இவர்கள் பால் சிவதீக்கைபெற்றுச் சைவவொழுக்கம் தலைநின்ற வேந்தர் பலர்.

சைவாசிரியன்மார் வகுத்துக்கொண்டிருந்த மடங்களும் குகைகளும் நமது

---

[3]. A.R. 247 of 1923
[4]. A.R. for 1912 para 29
[5]. A.R. for 1914 para 47
[6]. A.R. for 1915 para 31

நாடு முழுதும் பரவியிருந்தன. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் முதலியோர் காலத்திலும் இவைகள் திருப்புகலூர், திருவீழிமிழலை, திருமறைக்காடு, மதுரை முதலிய இடங்களில் இருந்தன என்பதைத் திருத்தொண்டர் புராணம் தெரிவிக்கின்றது. பின்னர் தோன்றிய கல்வெட்டுகளும், செப்பேடுகளும் இவற்றின் இருப்பை அவ்வவ்விடங்களில் குறிக்கின்றன. திருஞானசம்பந்தன் குகை, திருநாவக்கரசர் மடம், திருத்தொண்டத் தொகையான திருமடம் எனப் பலமடங்களும், குகைகளும் சோழ பாண்டியர் கல்வெட்டுக்களில் இடம் பெறுகின்றன.

சமயத் தொண்டு புரிந்த இம்மடங்கட்குத் தலைவர்களாகச் சைவாசாரியர் விளங்கினர். அவர்பால் அருளுரை கேட்டு அவர் விதித்த ஒழுக்கத்தை மேற்கொண்டு மாணவர் பலர் இருந்தனர். தலைமை தாங்கும் சைவாசிரியர் இறந்தால் அவர் மாணவருள் ஒருவர் தலைவராகி மடத்ததின் திருப்பணியைச் செய்வர்; அவர்கட்குப் பின் அவருடைய மாணவர் தலைவராவர். இவ்வாறு ஆசிரியர் மாணவர் என்ற முறையில் வழிவழியாக இம்மடங்கள் நின்று நிலவின. இது சந்தானம் என்றும் வழங்கும்.

திருஞானசம்பந்தர் முதலிய சிவஞான ஞாயிறுகள் தமிழகத்துச் சைவவானத்தில் தோன்றிச் சிவஞானப் பேரொளியைச் செந்தமிழால் பரப்பிய காலத்தில், வடநாட்டில், **மத்த மயூர சந்தானம்** என்றொரு சைவாசிரியர் மரபு விளங்கிற்று. அதன்கண் கடம்ப குகாதிவாசி, சங்கமாதிகாதிபதி, தேரம்பிபாலர், ஆமர்த்தக தீர்த்த நாதர், புரந்தரர், கவசசிவர், சதாசிவர், இருதயசிவர், வியோம சிவர் எனச் சைவாசிரியர் பலர் வழிவழியாக விளங்கிவந்தனர். இவருள், கடம்ப குகாதிவாசி கடம்பகுகை யென்னுமிடத்திலும், சங்கமாதி காதிபதி சங்கமாதிகையிலும், தேரம்பிபாலர் தேரம்பியிலும், ஆமர்த்தக தீர்த்தநாதர் ஆமர்த்தகத்திலும் இருந்து சமயப்பணி புரிந்தனர். புரந்தரர் உபேந்திரபுரம் என்னும் இடத்தே இருந்தார். அவந்திவன்மன் என்னும் வேந்தன் புரந்தரர்பால் சிவ தீக்கைபெற்று தன்னாட்டிற்கு அழைத்துச் சென்று அங்கே சமயப்பணி புரியுமாறு செய்தான். அவர் அங்கே ஓர் ஊரில் மடம் ஒன்றை நிறுவி அவ்வூர்க்கு **மத்த மயூரபுரி** எனப் பெயரிட்டுத் தமது மரபின் பெயரை நிலைபெறுவித்தார்; இராணி பத்திரம்(Ranod) என்னுமிடத்தே ஒரு மடத்தையும் அவர் ஏற்படுத்தினார். அவர் வழி வந்த வியோம சிவர் அம்மடங்களை வளம்படுத்திச் சமயப்பணியை விரிவு செய்தார். மத்த மயூர தடாகத்தைக் கட்டியவரும் அவரே என்பர். ஆமர்த்தகதீர்த்தநாதர் இருந்த ஆமர்த்தகத்திலிருந்து ஒரு கிளை தோன்றிச் **சிவபுரி சந்தானம்** என்ற பெயருடன் வடநாட்டில் சமயத் தொண்டு புரிந்தது[1].

மேலே கூறிய ஆசிரியருள் இருதய சிவர் என்பார்பால் சேதி நாட்டு வேந்தன் இலக்குமணராசன் சிவதீக்கை பெற்று அவரைத் தன் நாட்டிற்கு அழைத்துச்சென்று சிறப்பித்தான். அவன், தன் நாட்டிலுள்ள வைத்தியநாதமடம், நகுலேசுரமடம் என்ற இரண்டுக்கும் அவரையே தலைவராக இருந்து நடத்துமாறு ஏற்பாடு செய்தான். அதற்கு இசைந்த இருதய சிவர் தம்முடைய மாணவரான அகோரசிவர் என்பவரை நகுலேசுர மடத்துக்குத் தலைவராக நியமித்தார். (தொடரும்...)

[1] Epigraphica Indica. Vol. III p.266.

# நினைவிற் கொள்வதற்குரிய வழிபாட்டு நாட்கள்

## துர்முகி வருடம் ஐப்பசி மாதம் -2016

| தமிழ்த் திகதி | ஆங்கிலத் திகதி | கிழமை | விரதம் |
|---|---|---|---|
| 01 | 17.10.2016 | திங்கள் | மாதப்பிறப்பு |
| 02 | 18.10.2016 | செவ்வாய் | கார்த்திகை விரதம் |
| 03 | 19.10.2016 | புதன் | சங்கடஹர சதுர்த்தி விரதம் |
| 05 | 21.10.2016 | வெள்ளி | ஐப்பசி வெள்ளி |
| 07 | 23.10.2016 | ஞாயிறு | சத்தி நாயனார் குருபூசை |
| 12 | 28.10.2016 | வெள்ளி | ஐப்பசி வெள்ளி, பிரதோஷ விரதம் |
| 13 | 29.10.2016 | சனி | தீபாவளி |
| 14 | 30.10.2016 | ஞாயிறு | அமாவாசை விரதம், கேதாரகௌரி விரதம், மெய்கண்டதேவர் குருபூசை |
| 15 | 31.10.2016 | திங்கள் | கந்தஷஷ்டி விரதாரம்பம் |
| 17 | 02.11.2016 | புதன் | பூசலார் நாயனார் குருபூசை |
| 18 | 03.11.2016 | வியாழன் | சதுர்த்தி விரதம் |
| 19 | 04.11.2016 | வெள்ளி | ஐப்பசி வெள்ளி, ஐயடிகள் காடவர்கோன் நாயனார் குருபூசை |
| 20 | 05.11.2016 | சனி | கந்தஷஷ்டி விரதம் |
| 26 | 11.11.2016 | வெள்ளி | ஐப்பசி வெள்ளி |
| 27 | 12.11.2016 | சனி | சனிப் பிரதோஷ விரதம் |
| 28 | 13.11.2016 | ஞாயிறு | திருமூல நாயனார் குருபூசை |
| 29 | 14.11.2016 | திங்கள் | பூரணைவிரதம், ஐப்பசிப்பரணி, கார்த்திகை விரதம், நின்றசீர் நெடுமாற நாயனார் குருபூசை |
| 30 | 15.11.2016 | செவ்வாய் | இடங்கழி நாயனார் குருபூசை |

## துர்முகி வருடம் கார்த்திகை மாதம்

| | | | |
|---|---|---|---|
| 01 | 16.11.2016 | புதன் | மாதப்பிறப்பு |
| 02 | 17.11.2016 | வியாழன் | சங்கடஹர சதுர்த்தி விரதம் |
| 06 | 21.11.2016 | திங்கள் | சோமவார விரதம், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசை |
| 09 | 24.11.2016 | வியாழன் | மெய்ப்பொருள் நாயனார் குருபூசை |
| 10 | 25.11.2016 | வெள்ளி | ஆனாய நாயனார் குருபூசை |
| 11 | 26.11.2016 | சனி | சனிப் பிரதோஷ விரதம் |

| | | | |
|---|---|---|---|
| 13 | 28.11.2016 | திங்கள் | சோமவார விரதம் |
| 14 | 29.11.2016 | செவ்வாய் | அமாவாசை விரதம் |
| 16 | 01.12.2016 | வியாழன் | மூர்க்க நாயனார் குருபூசை |
| 17 | 02.12.2016 | வெள்ளி | சிறப்புலி நாயனார் குருபூசை |
| 18 | 03.12.2016 | சனி | சதுர்த்தி விரதம் |
| 20 | 05.12.2016 | திங்கள் | ஷஷ்டி விரதம், சோமவார விரதம் |
| 21 | 06.12.2016 | செவ்வாய் | 23ஆம் குருமூர்த்திகள் சிவப்பிரகாச சுவாமிகள் குருபூசை |
| 26 | 11.12.2016 | ஞாயிறு | பிரதோஷ விரதம் |
| 27 | 12.12.2016 | திங்கள் | திருக் கார்த்திகை விரதம், குமாராலய தீபம், கணம்புல்ல நாயனார் குருபூசை |
| 28 | 13.12.2016 | செவ்வாய் | பூரணை விரதம், சர்வாலய தீபம்,விஷ்ணு ஆலய தீபம் |
| 29 | 14.12.2016 | புதன் | விநாயக விரதாரம்பம் |



## துர்முகி வருடம் மார்கழி மாதம்


| | | | |
|---|---|---|---|
| 01 | 16.12.2016 | வெள்ளி | மாதப்பிறப்பு |
| 02 | 17.12.2016 | சனி | சங்கடஹர சதுர்த்தி விரதம் |
| 06 | 21.12.2016 | புதன் | இயற்பகை நாயனார் குருபூசை |
| 09 | 24.12.2016 | சனி | மானக்கஞ்சாற நாயனார் குருபூசை |
| 11 | 26.12.2016 | திங்கள் | பிரதோஷ விரதம் |
| 13 | 28.12.2016 | புதன் | அமாவாசை விரதம் |
| 15. | 30.12.2016 | வெள்ளி | சாக்கிய நாயனார் குருபூசை |
| 18 | 02.01.2017 | திங்கள் | உதயத்தின்முன் திருவெம்பாவைப் பூஜாரம்பம் சதுர்த்தி விரதம் |
| 19. | 03.01.2017 | செவ்வாய் | விநாயக ஷஷ்டி விரதம் |
| 22 | 06.01.2017 | வெள்ளி | வாயிலார் நாயனார் குருபூசை |
| 24 | 08.01.2017 | ஞாயிறு | கார்த்திகை விரதம் |
| 26 | 10.01.2017 | செவ்வாய் | பிரதோஷ விரதம், இரவு நடேசர் ஆருத்திரா அபிஷேகம் |
| 27 | 11.01.2017 | புதன் | உதயம் நடேசர் ஆருத்திரா தரிசனம், திருவாதிரை விரதம், சடையனார் நாயனார்குருபூசை |
| 28 | 12.01.2017 | வியாழன் | பூரணை விரதம் |



# திருவாவடுதுறை ஆதீனச் சைவசித்தாந்தப் பயிற்சி மையம், கொழும்பு.
## உண்மைவிளக்கக் கதவம் நூல் வெளியீடு






# திருவாவடுதுறை ஆதீனச் சைவசித்தாந்தப் பயிற்சி மையம், கொழும்பு.


## சைவத் திருமுறைப் பயிற்சி வகுப்பு



## சைவ சித்தாந்தப் பயிற்சி வகுப்பு



## சோதிட வகுப்பு





## சைவத் திருமுறைப் பயிற்சி வகுப்பு, இணுவில். (யாழ்ப்பாணம்)





இவ்விதழ் கொழும்பு திருவாவடுதுறை ஆதீன சைவசித்தாந்தப் பயிற்சி மையத்தினரால்
Sharp Graphics(Pvt.) Ltd. இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.